தென்மொழி

கன்னித் தமிழ்நிலம் உணருமா - புதுக் கதை தரும் உரிமைகள் மலருமா?

தமிழ்மொழி காக்கவும்
தமிழினம் மீட்கவும்
தமிழ்ப்படை அங்கே எழுந்தது!—நெடுந்
தமிழ்ப்பகை உடனே விழுந்தது!
குமிழ்த்தெழும் குருதி!
குன்றுதோள் உறுதி!
கொள்கைத் தமிழர்கள் கூடினர்!—ஒரு
குரலினுல் விடுதலை பாடினர்!

தெற்குச் சிவந்தது!
திந்தமிழ் நிவந்தது!
செந்தமிழ் ஈழம் மலர்ந்தது!—கொடுஞ்
சிங்களப் பெரும்பகை உலர்ந்தது!
கற்குன் றென,ஒரு
காட்சியும் பிறந்தது!
கன்னித் தமிழ்நிலம் உணருமா?—புதுக்
கதைதரும் உரிமைகள் மலருமா?

சுவடி 17
ஓலை : 4

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
உருபா 1-25

www.thamizham.net - Free E book No 7505

நமக்கு வந்த மடல்கள்

0:814: அன்புடையீர், தென்மொழி இதழில் பிழை யிருக்கக் கூடாதென—பிழை இல்லை யெனக் கருதுபவன்யான். சுவடி 17, ஓலை 8-இல் (துலை) 24-ஆம் பக்கத்தில் 'பங்கீடு'—எனும் பத்தியில் 'பசியை ஒழிக்கத் தவறுவது கொல்லாமைக்கு நிகரானது'—என்னும் வரியுள்ளது. மேலும் அப் பத்தி அமைந்துள்ள கட்டுரையில் சில சொற் பிழைகளும் தலை காட்டியுள்ளன. இக் குறை ஏனோ? நான் இவற்றைக் குறித்துக் காட்டுவது தவறெனில் பொறுத்தருள்க.

தென்மொழியன்பன்— **சூ. ச. கிருட்டிணமூர்த்தி,** சூரியனூர் கோயில், திருமங்கலக்குடி

0:815: பெருந்தகை பாவலரேறு ஐயா, தங்களின் தென்மொழி இயக்கம் துவக்கும் அறிக்கை கண்டேன். இதனால் தங்களின் தமிழ்மொழிப் பணியும் தடைப்பட்டுத் தங்களிடமிருந்து தமிழ்நாடு பெறவிருக்கும் அரிய கருத்துகளையும் பெற முடியாமல் போவதுதான் மிச்சமாக இருக்கும். இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல் - என்னும் குறளறிந்த தமிழ்க்கடலே, தமிழ்மொழி வளர்ச்சிக்கும், தமிழின உயர்வுக்கும் மட்டுமே ஓயாது உழைப்போம்! இது நன்செய் நிலத்திலே விதைத்த விதையாக இருக்கும். 'தமிழ்நாடு விடுதலை' என்னும் கொள்கையால் முதல் இரண்டு கொள்கைகளை நாமே அழித்ததாக இருக்கும். மேலும் இது கற்பாறையிலே விதைத்த விதையாகவும் இருக்கும்

அறிஞர் அண்ணாவால் அறிமுகப்படுத்தப்பட்ட இருமொழித் திட்டம் வெறும் அரசியல் நடவடிக்கை யன்று. தமிழ்நாட்டு விடுதலைக்குத் தமிழர்களை அணியப்படுத்தும் விடுதலை முயற்சியாகும். தி. மு. க, அ. தி. மு. க, பா. உறுப்பினர்கள் வெளிநாடு சென்றது குறித்துப் பார்ப்பன ஏடுகள் வெளியிட்ட, செய்திகள் முற்றிலும் தவறானவை என்பதைக் கலைஞர் தெளிவுபடுத்தியுள்ளார். எனவே தென்மொழி இயக்கத்தின் கொள்கைகளான தமிழ் வளர்ச்சி, தமிழர் முன்னேற்றத்திற்காக, திராவிட இயக்கங்களை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

—துப்பாக்கி. **தி. அன்பழகன்,** (க. இ) திருச்சி-16.

0:816: பெருமதிப்பிற்குரிய ஐயா, **'ஆதி - இஃது ஆதித் தமிழ்ச் சொல்லே'** கட்டுரை படித்தேன். ஆதி தமிழ்ச் சொல்லானால் இனி **அகராதி** என்றே வழங்கலாமா? ஒரு சொல்லை வட சொல் என்ற பின் மீண்டும் அது தமிழ்ச் சொல்லே என்று கூறினால் மக்கள் பகடி செய்யாரோ? அறிவு ஆய்வுக்குரியதே என்றாலும் அடிக்கடி கருத்து மாறினால் தெளிவற்ற போக்கால் தமிழ்ப் பகைவர் எளிதாகத் தாக்குவதற்கும் ஆளாவோமன்றோ? தனித் தமிழ் ஆர்வலர்கள் பாவாணரை முழுமுதலாக நம்பியிருந்தோம். பாவாணர்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

www.thamizham.net - Free E book No 7505

"கெஞ்சுவதில்லை பிறர்பால்;
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!



சுவடி: 17 ஓலை: 4.
[நிறுவனம் தி. பி. 1990 (1959)]
நளி. தி. பி. உ௰கக-
நவ-டிச-1980.

தென்மொழி

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்
புரப்பாசிரியர்கள்
தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)
தென்மொழி மறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)
தென்மொழி. ந. முத்துக்குமரனார் (தமிழ்நாடு)
தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்
அமைச்சர்: அழ. இளமுருகன். அறி. இ.
(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன)

மதமெனும் பெயரால் நடைபெறும் பொதுத் தொல்லைகளை அரசு தடுத்து நிறுத்துதல் வேண்டும்.

நாம் வாழும் இவ் விந்திய நாடு வறுமை மிகுந்த நாடு; அத்துடன் அறியாமை நிறைந்த நாடு. ஆனால் மக்கள் பெருக்கமுடைய நாடு. நாட்டு மக்களில் எண்பது விழுக்காட்டினர் வறுமை மிக்க ஏழையராகவும், தொண்ணூறு விழுக்காட்டினர் அறியாமை நிரம்பியமூட நம்பிக்கைகள் மிகுந்தவர்களாகவும் இருப்பது பெரிதும் வருந்தத் தக்கதாகும். எனவேதான், இங்குப் பணம் படைத்தவர்களும் மதச் செருக்கர்களுமே பெரும்பாலான ஏழை மக்களை ஏமாற்றியும் சுரண்டியும் அடிமைகளாக்கியும், இதனை ஒரு கொடுமை மிக்க நாடாக ஆக்கி வருகின்றனர். அறியாமையும் ஏழ்மையும் மிகுந்த நாட்டிற்குக் குடியரசுரிமை கிடைத்தது, செல்வக் கொள்ளையர்களுக்கும், மதக் கொள்கையர்களுக்குமே வாய்ப்பாக அமைந்தது. அவ்விரு வகையினரும் மக்களை நசுக்கிப் பிழிந்து, அவர்களின் உழைப்பைப் பெற்றுத் தங்களை வளப்படுத்திக் கொள்ள

வும், அவர்களை மத மூட நம்பிக்கைகளில் வீழ்த்தி அறியாமையி னின்று மீள முடியாதவர்களாக அழுத்தி வைக்கவும் முடிகிறது. இவ்விரு நிலையினரே பதவிகளைக் கைப்பற்றவும் அதிகாரங்கள் பெறவும் வாய்ப்புகள் அமைகின்றன. இவர்களுக்குத் துணை போகும்படி இங்குள்ள சட்ட அமைப்புகளும், காவல்துறைக் கண் காணிப்புகளும் கலைத்துறை வாய்ப்புகளும் அரண்களாக அமைந் துள்ளதை எவரும் மறுத்தல் இயலாது. எனவேதான் இங்குத் தொழில்கள் வளர்வதில்லை; வேளாண்மைச் செழிப்பு ஏற்படுவ தில்லை; பொதுமை மலர்வதில்லை; பொதுவுடைமை நாற்று விடுவ தில்லை. இவற்றுக்கு அடிப்படையாக விருக்கும் முதலாளிய வல்லாண்மையையும், மத ஆளுமைகளையும் ஒழித்தாலொழிய அண்மை எதிர்காலத்தில் இங்குத் தோன்றி வளரும் மறுமலர்ச்சி நிலைகள், தலைதூக்கிச் செழிப்பது அருமையிலும் அருமை!

அறியாமையும் ஏழ்மையும் மக்களை விலங்கு நிலைக்கு இட்டுச் செல்லும் இரண்டு கீழ்நிலைக் கோட்பாடுகள். பண்டைய அரசர்க ளாட்சிக் காலங்களில் இவ்விரு கோட்பாடுகளும் மக்களில் ஒரு பகுதியினரிடையே தேவையென்றே கட்டிக் காக்கப் பெற்றன. ஏனெனில், அவர்கள் இவ்விரு அழிவுக் கூறுகளினின்றும் விடுபட்டு மேம்பாடும் வலிமையும் பெறுவார்களானால், தங்கள் மன்னர் மரபாட் சிக்கு அழிவு நேரும் என்பது அவர்கள் அச்சம். எனவே இவை அரசர்க்குரிய கோட்பாடுகளாக, சூழ்ச்சி மிகுந்த செல்வர்களாலும் மத வல்லாண்மை மிக்க புரோகிதக் குருமார்களாலும் அறிவுறுத்தப் பெற்றுச், சாணக்கியம், மாக்கிய வில்லியம் முதலிய பொருள் நூல் களிலும், சுக்கிர நீதி, மனுநீதி முதலிய அற நூல்களிலும் வலி யுறுத்தப் பெற்றன. இன்றுள்ள இந்திய அரசமைப்பும் மேற்கண்ட நூல்களுக்குப் பெரும்பாலும் மாறுபடாதவாறு வகுக்கப் பெற்றுள்ள தாலேயே, இந்நாட்டில் செல்வர்களுக்கும் மத வாளுமைகாரர்களுக் கும் இவ்வளவு கொடிய ஆளுமையும் அதிகாரங்களும் ஏற்பட் டுள்ளன. இந்நாடு உண்மையிலேயே முன்னேறி, மக்கள் சமநிலை யும் நிகரமையும் பொதுவுடைமையும் எய்தி, மேம்பட்ட அரசியல், பொருளியல், குமுகாய வியல் ஆளுமை இங்கேற்பட வேண்டு மானால், செல்வர்களுக்குக் கையோக்கம் தருவதும், மதவாளுமைக் காரர்களுக்கு நடைத் தாராளம் ஏற்படுத்துவதுமான இப்பொழு துள்ள அரசியல் திருடர்களினதும், குமுகாயக் கொள்ளையர்களினது மான போலிக் குடியரசு ஆளுமை அறவே ஒழிக்கப்படல் வேண்டும். அதுவரை, தப்பித்தவறிப் பாராளுமன்றத்திற்கும், சட்டமன்றத் திற்கும் நாம் அனுப்பி வைக்கும் நல்லவர்கள் சிலரால், சிற்சில வேளைகளில், பற்பல கட்டுத் திட்டங்களையும் எதிர்ப்புகளையும் மீறிக் கொணரப் பெறும் சட்ட திட்டங்களும், நடைமுறைத் திருத்தங் களும் செயலற்ற வெறும் ஊமைச் சட்டங்களாகவும் நடைமுறைக் குதவாத நொண்டித் திட்டங்களாகவுமே போகும் என்பதை,

www.thamizham.net - Free E book No 7505

அரசியல் குமுகாய மாற்றங்களை விரும்பும் சிற்சில நல்லவுள்ளங்கள் உறுதியாக கருதிக் கொள்ளுமாக.

இனி, தமிழ்நாட்டைப் பொறுத்த வரை, திரவிடராட்சியென்றும், தமிழராட்சியென்றும் சிற்சிலரால் கடந்த காலங்களிலும் இக்காலும் அமைக்கப் பெற்றதும், பெற்று வருவதுமான ஆட்சியும் அதே வகையில் செல்வர்கள் சாய்கால் உடையதும், மதங்களின் மேய்ப்பர்களால் ஆட்டிவைக்கப் பெற்றதும் பெறுவதுமான ஆட்சியே என்று கூறுமலிருப்பதற்கில்லை. எத்துணைப் பகுத்தறிவு வாய்ந்தவர்களாக விருந்தாலும், ஏழையர் மேல் இரக்கமுடையவர்களாக விருந்தாலும் முதலாளியத்திற்கும், மதங்களுக்கும் அஞ்சி, இவர்கள் தங்கள் கோட்பாடுகளையும் கொள்கைகளையும், திட்டங்களையும் சட்டங்களையும் கைநெகிழ்த்தே வந்துள்ளனர்; வருகின்றனர். சிற்றூர்ப்புறங்களில் வாழும் ஏழை மக்களைக் கொள்ளையடித்துப் பட்டணத்தில் உள்ளவர்களுக்கு ஓர் ஆரவாரமான வாழ்வு வாழக் கற்றுக் கொடுக்கும் சூதாட்டமே இன்றுள்ள அரசியலாகும். அதேபோல், அறியாமை மிகுந்த ஏழை மக்களை ஏமாற்றிப் பணம் பறித்து நகர்ப்புறங்களில் வேடிக்கைகளும் விழாக்களும் நடத்துவதே இன்றுள்ள மதக் கோட்பாடாகும். ஒருநாள் வரும் விளக்கணி (தீபாவளி)த் திருவிழாவில், மதம் என்னும் பெயரால் புகைக்கப் பெறும் விலைமதிப்பற்ற எரிபொருள்களின் பொருளியல் மதிப்பு எவ்வளவு? வெடி மருந்துகளின் அளவு எவ்வளவு? அவற்றை நாட்டுக் காவல் நிலைக்கும், பிற உள்நாட்டு ஆக்கத்திற்கும் ஏன் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது? அத் திருவிழாவுக்கு ஏன் தடை போட அஞ்சுகிறது அரசு? தேவையெனில், எண்ணெய் முழுக்கும், தின்பண்டத் தீனிகளும், புத்தாடைப் புனைவுகளுமே நாட்டு நலம் கருதா அக் கொண்டாட்டக் கொடும்பர்களுக்கும் குறும்பர்களுக்கும் போதாவா? வெடிகள், பொறிப் புகைச்சல்கள் ஒரு கேடா? அவை இருந்துதான் ஆக வேண்டுமா? எந்த மடயன் எந்த ஆராய்ச்சியால் இத்தகைய வீண் ஆரவாரப் பொருளியல் கேடான விழா வேண்டுமென்று அரசுக்குச் சொன்னான்? இவ்வாரவார விழாவால் ஏற்படும் பொருள் கேடுகள் எவ்வளவு? எத்தனைக் கல்லெடை வெடி மருந்துகள்! எத்தனைக் கல்லெடைத் தாள்கள்! இரும்புகள்! மரங்கள்! வண்ணங்கள்! எத்துணை அழிவுகள்? எத்துணைப் பெருந் தொல்லைகள்! அமைதிக் கேடுகள்! எத்துணை வேலை மெனக் கேடுகள்! செல்வச் செருக்கர்கள் கொளுத்தும், அல்லது வெடிக்கும் ஆயிரக்கணக்கான உருபா மதிப்புடைய சுடர்ப்புகைகளுக்கும் வெடிகளுக்கும் ஆசை கொண்டு உள்ளம் ஏங்கும் ஏழை மக்களுக்கு எத்துணை மனச்சலிப்பு ஏற்படும்? அம் மன வேக்கம் கொண்ட குழந்தைகளை நிறைவு செய்யும் பொருட்டு, அவற்றின் ஏழைப் பெற்றோர்கள் படும்பாடு எத்துணை பெரிது! கொடியது! மேலும், பொது

www.thamizham.net - Free E book No 7505

மக்களுக்கும், போக்குவரத்துக்கும் எத்துணை இரைச்சல் கேடுகள்! ஏத அழிவுகள்! சேத இழப்புகள்! ஏன் இந்த மூளை கெட்ட மூண்ட அரசியலாளர்களுக்கு இது விளங்கவில்லை? அல்லது, விளங்கினாலும் அவற்றைத் தடுத்து நிறுத்த ஏன் துணிவில்லை? அடுத்த முறை முதலாளியர்களினதும், சங்கராச்சாரிக் கூட்டக் குளுவான்களினதுமான ஆதரவு கிடைக்காது என்கின்ற அச்சந்தானே! நாட்டு மக்கள் நலங்கருதாமல் அவ்வாறு அச்சப்பட்டுக் கொண்டிருக்கின்ற சுடுகாட்டுப் பதவி எதற்கு? அதற்கு ஏன் ஆளுமைக் கட்டிலில் போய் அமர வேண்டும்? **'செயற்கரிய செய்வார் பெரியர்'** என்று திருவள்ளுவர் எழுதியது உந்து வண்டிகளில் பொறிப்பதற்குத் தானே? அல்லது பெரியார் நூற்றாண்டு கொண்டாடுவதற்குதானே?

இனி, நளி (கார்த்திகை) மாதம் தொடங்கினால் போதும். ஐயப்பன் பெயரைச் சொல்லிக் கொண்டு, திருடர்களும், கொடியர்களும், கொள்ளையர்களும், அரம்பர்களும் ஆடும் - ஆட்டத்திற்கு அளவே இல்லை. ஒலிபெருக்கிக்கான ஒழுங்கு முறைகள் நடைமுறையிலிருந்தும், காலை 4—4½ மணிக்கே எழுந்து, ஊரே அலறும்படி ஒரேபடியான பாடல்களை 40, 45 நாட்கள் திருப்பித் திருப்பி வைப்பதால், அண்டையயலில் உள்ள பொதுவுணர்வாளர்களுக்கு எத்துணை தொல்லை! அக்காலம் அரையாண்டுத் தேர்வுக் காலமாகையால் அதிகாலையில் எழுந்து படிக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் பள்ளி மாணவர்களுக்கும் இவற்றால் எத்துணை இடையூறு! இடர்ப்பாடு! ஐயப்பா, ஐயப்பா என்று ஒலிபெருக்கி அலறுவதால் பத்திமை வளருமா? இறையருள் கிட்டுமா? அல்லது அவ்வாறு கத்திக் கமறும் அந்தக் கொண்டாட்டக் கூத்தர்டிகளுக்குத்தான் நன்மை கிடைக்குமா? இதற்கெல்லாம் இறைவன் ஏமாறி இரங்கி அருள் தருவான் என்றால், அந்த இறைவனும் இவர்களைப் போல் ஒரு கொள்ளையனாகவும், கொடியனாகவுமன்றோ இருத்தல் வேண்டும்? இஃது என்ன மூடநம்பிக்கை! 'ஒலிபெருக்கியைத் தெருவுக்குத் தெரு, மூலைக்கு மூலை வைத்து, இசைத்தட்டுகளைப் போடுவதுதான் ஐயப்பன் திருவிழாவா? பூசையா? நோன்பா? மலைச் செலவுகளுக்கும் மகர விளக்கு பார்ப்பதற்கும் அணியப்படுத்தும் ஊக்கவுரைகளா? அவ்வாறானால் அந்நோன்பு நோற்காதவர்களுக்கும், அம் மகர விளக்குப் பார்க்கப் போகாதவர்களுக்கும் அவ் வொலிபெருக்கி இரைச்சல் எதற்கு? இல்லை, அரசு, நாட்டிலுள்ள அனைவருமே, நாடு நகரங்களை வெறுமையாக்கி விட்டு விட்டு அங்குப் போய், அந்த மகர விளக்குக் காட்சியில் ஈடுபட வேண்டும் என்று விரும்புகிறதா?

இனி, இது போலவே, சிலை (மார்கழி) மாதத்தில் மிகு காலைப் பொழுதில் அலறுகின்ற ஒலிபெருக்கிகளில் ஒரிரு திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்கள் மட்டும் வைத்துவிட்டு, அவற்றைத் தொடர்ந்து, இழிவும் இழுப்பும் நிறைந்த கழிகாமத் திரைப்படக்

www.thamizham.net - Free E book No 7505

குக்கலிசைகள் ஆரவாரிப்பது எந்த அமைச்சருடைய காதுகளையும் புண்படுத்தவில்லையா? அல்லது அவர்கள் நகருக்கு வெளியே தன்னந் தனியிடத்தில் அளாவிக்கட்டிய வளமனைகளில், வளிநிலைப் பாட்டு அறைகளில் படுத்துத் தூங்கும் வாய்ப்புகளால் கொண்ட புறக்கணிப்பா? ஏன் இந்நிலைகளைத் தடை செய்யக் கூடாது? ஏற்கனவே வீட்டுக்கு வீடு, அண்டையயல் வீட்டுக்காரர்கள் விரும்பியோ விரும்பாமலோ, அலறியடிக்கும் வானொலிப் பெட்டிகளின் இரைச்சலுடன், தெருவுக்குத் தெரு கதறியெடுக்கும் ஒலிபெருக்கிகளின் வல்லிரைச்சலும் சேர்ந்து நகரத்தையே நரகலாக்கிக் கொண்டிருக்கவில்லையா? இதை ஏன் அரசு கவனிக்கவில்லை? மதக் கொழுப்பர்களின் மனம் புண்படக் கூடாது என்பதாலா? அல்லது அவர்களே மத மூடநம்பிக்கைகளுக்கு ஆட்பட்டதாலா? இத் தவிர்க்கவியலாக் கொடுமைச் சூழல்களால் அமைதியான வாழ்க்கை வாழ விரும்பும் பிறருடைய மனங்களும் செவிகளும் புண்படாவா?

இவை தவிர ஆடவை, கடக (ஆனி, ஆடி) மாதங்களில் தெருக்கள் தோறும், சந்து பொந்துகளிலும், மூலை முடுக்குகளிலும், நெடுஞ்சாலை ஓரங்களின் இடையிலும் முளைத்துக் கிடக்கும் மாரியம்மன்களுக்கு, மாறி மாறி விழா வெடுக்கும் நோக்கத்துடன், கொட்டு முழக்குடன் கூடிய ஒலிபெருக்கி இரைச்சல்களுக்கு அளவுண்டா? இன்னும் அவ்விழாக்களை நடத்தும் குடிகாரர்களும், குடிகேடர்களும், கொடிய அரம்பர்களும், மூடநம்பிக்கை மூஞ்சுறுகளும், அண்டையிலும் அயலிலும் உள்ள குடியிருப்புக்காரர்களிடம் கும்பல் கும்பலாகப் போய் ஐந்து, பத்தென்றும், தெருக்களில் வருவோர் போவோரிடமும், சாலைகளில் வரும் போகும் வண்டிகளில் உள்ளோரிடமும், உண்டியல்களை ஏந்தியும் குலுக்கியும், கொள்ளையடித்தும் வழிப்பறித்தும், இடர்ப்படுத்தும் இன்னல்களை என்னென்று சொல்வது? இதைவிட எப்படி எழுதிக் காட்டுவது? ஏன் இது பொதுத் தொல்லை (Public Nuisance) ஆகாது? இது பற்றி அமைச்சர்களுக்கு ஏன் சூடு சுரணை இல்லை? இவற்றைக் கேட்பதால் பூணூல் திருமேனிகள் பொங்கியெழும் என்பதனால் வரும் ஊமைத்தனமா? அல்லது தமிழின மூடக் களஞ்சியங்களின் எதிர்ப்பு வரும் என்னும் தொடை நடுங்கித்தனமா? சிங்கப்பூர் முதலிய முன்னேறிய நாகரிகங் கொண்ட நாடுகளிலும் கூட, அண்டை வீட்டாருக்குக் கேட்கும்படி வானொலியை வைத்தாலும் குற்றம், அதற்குத் தண்டம், என்பது இங்குள்ள ஆட்சியாளர் அனைவரும் இல்லையாயினும், ஒரு சிலராகிலும் அறிந்திருக்க மாட்டார்களா? இனி, அங்கு ஒலிபெருக்கிகளை தெருவில் கட்டக் கூடாது என்பது சட்டமன்றோ? அப்படியெல்லாம் பொதுவொழுங்கைச் சரி செய்வதற்கு இங்கு என்ன நொட்டை அல்லது நோப்பாளம் வந்தது? இவர்கள் மேல் நாடுகளும் கீழ் நாடுகளும் போவது எதற்கு? வேடிக்கை பார்க்கவா?

www.thamizham.net - Free E book No 7505

அல்லது இரவு நேரக் காட்சிகளைக் கண்டு நாக்கைச் சப்புவதற்கா? ஏன், அங்குள்ள சீர்திருத்தங்களை, பொது ஒழுங்கு நடைமுறைகளை இங்கும் கொண்டு வரக் கூடாது? இதில் என்ன தயக்கம் அல்லது மயக்கம்?

இனி, கலைமகள் விழாவென்றும், கருவிப் பூசையென்றும், இங்குள்ள அரசு அலுவலகங்களிலும், தனியார் அலுவலகங்களிலும் ஆண்டுதோறும் நடைபெறும் பார்ப்பனர்களினதும், பார்ப்பன அடிமைகளினதும் தொல்லை கொஞ்சமா? அவற்றைப் பகுத்தறிவு பேசும் இவர்கள் ஏன் பின்பற்றக் கூடாது? தமிழ் எழுத்துகளில் மட்டுந்தானு—தமிழ் திறந்த மடம் என்பதாலும்—அது ஏதிலி போட்ட பிள்ளை என்பதாலும்—கைவைத்துச் சிதைப்பது பகுத்தறிவு என்று கருதிக் கொண்டார்கள்!

இவை தவிர வேறு எத்தனை எத்தனை மத மூடச் செயல்கள் இங்கு நடைபெறுகின்றன! அவற்றால் அரசுக்கு எத்தனை இழப்பு! பொதுமக்கள் அனைவருக்கும் ஏற்ற பொதுவான செயல்களை மட்டும் ஊக்கி, அவரவர் விருப்பத்திற்கு அவரவர் வீடுகளிலோ அறைகளிலோ கவனித்துக்கொள்ள வேண்டிய மதச் செயல்களுக்கும், பொது இடையூறுகளுக்கும் ஏன் தடையிடக் கூடாது?

இவ்வேதுங்கெட்ட இந்திய நாட்டில், இங்குள்ள மக்கள் பெருக்கம் போலவே மதப் பெருக்கமும் ஏற்பட்டு வருகிறதே! இந்து மதம் என்ற இழவெடுத்த பார்ப்பன மதத்தில் மட்டும், சிவனியம் (சைவம்) காளியம் (சாக்தம்), மாலியம் (வைணவம்), முருகியம் (கௌமாரம்), ஆனைமுகவம் (காணபத்தியம்), கதிரவம் (சௌரம்), என்னும் வைதீக மதங்களும்; கபிலம், கணாதம், பதஞ்சலியம், அட்சபாதம், வியாசம், சைமினியம் ஆகிய **வேதாந்த** மதங்களும்; பௌத்தம், வைரவம்; காளாமுகம், சூனியவாதம், உலோகாயுதம், சமணம் ஆகிய **புறமதங்களும்**; வாமம், மாவிரதம் முதலிய அகச் சமயங்களும்; தார்க்கியம், மீமாம்சம், ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், வேதாந்தம், சித்தாந்தம், நாதாந்தம், போதாந்தம், யோகாந்தம், கலாந்தம் முதலிய சிறு சிறு கலவை மதங்களும், ஆக முப்பத்தாறு மதங்களும்; இன்னும் கிறித்துவ மதத்தில் உரோமன் கத்தோலிக்கம், உலூதரம், புரோட்டசுடன்டியம், உரோமானியம், பாப்டிசம், வேசுலியனம், வொயிட்பீல்டிசுடியம் கால்வனிசுட்டம், ஆண்டிஞேமியனியம், பிரசுபிடேரியனியம், யூனிடேரியனியம், இலண்டனியம், இசுகாட்டியம், சுவீடன் பர்கியனியம், பிரிமேசனியம், கிரேக்கியம், கீனியாயம் முதலிய பத்தொன்பது சிறு மதப் பிரிவுகளும்; இசுலாம் மதத்தில் சியாம், சுன்னி என்னும் இரு மதப் பிரிவுகளும், இவையன்றிப் பாரசிகம், கான்பூசியம், சாயியம், இராம கிருட்டிணம், அரே இராம அரே கிருட்டிணம், துவைதம், அத்துவை

www.thamizham.net - Free E book No 7505

தும், துவைதாத்வைதம், மத்துவம் முதலிய எண்ணிறந்த மதங்களும் தோன்றி நடைமுறையிலுள்ளனவும், தோன்றிக் கொண்டே இருப்பனவும், இந்நாட்டு மக்களின் மூளைகளையும் நெஞ்சங்களையும் என்றென்றும் மேம்பாடடையச் செய்யாமல் அழுத்தி வைத்துக் கொண்டுள்ள நிலை எத்துணை இரங்கத்தக்கது! இனி, இவையல்லாமல் சிற்றூர்ப்புறங்களில் உள்ள காட்டேரி, கருப்பன், வீரபத்திரன், மதுரைவீரன் முதலிய ஆயிரக்கணக்கான சிறு குலதெய்வங்கள் எத்தனை! எத்தனை! இவற்றுக்கெல்லாம் செய்யப் பெறும் வேடிக்கைகள், எத்தனை! விழாக்கள் எத்தனை! இவற்றாலெல்லாம் பொது மக்கள் அனைவர்க்கும் எத்தனை எத்தனைத் தொல்லைகள்! இடையூறுகள்! இடர்ப்பாடுகள்!

ஒருபுறம் அறிவியல் வளர்ச்சி போதவில்லை என்று வாய் கிழியக் கத்துவது! கூச்சலிடுவது! மறுபுறம் மக்களை இன்னும் காட்டு விலங்காண்டித்தனத்திலேயே நிலைபெறும்படி அழுத்தி வைத்திருப்பது! எத்துணை முரண்பாடான போக்கு! இந்த நாட்டில் போடப் பெறும் முன்னேற்றத் திட்டங்கள் அனைத்தையும் மூழ்கடிக்கும் வகையில் இங்குள்ள மதப் பெருக்கங்களை—மூட நம்பிக்கைகளை மக்களிடம் பெருக்குவதை எவர் மறுக்க முடியும்! காஞ்சி காமகோடியார் போலும் சங்கராச்சாரியார்கள், அறிவு வளர்ந்தாலும் வளரா விட்டாலும், மக்களிடம் உள்ள மத மூட நம்பிக்கைகள் போய்விடக் கூடாதே என்னும் கவலையினாலும் கருத்தினாலும், எவ்வளவுக் கெவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு பார்ப்பன, பார்ப்பன அடிமைப் பட்டாளங்களை வைத்துக்கொண்டு, அங்கிங்கெனாதபடி எங்கும் (வண்டியில் போனால் இடையிலுள்ள சிறுசிறு ஊர்கள் விட்டு விடும் என்பதால்) நடந்து போய், மதத்தின் நச்சு வித்துகளை ஊன்றி வருவதையே குறிக்கோளாக் கொண்டுள்ளனர். அவர்களுக்கு இங்குள்ள மகாலிங்கச் செல்வர்களும், முத்தையச் செல்வர்களும் அன்றாடம் வாய்க்கரிசி போட்டு வழி நடத்தி வருகின்றனர். இவ்வாறு மதத்திற்கு முதலாளிகள் காப்பாகவும், முதலாளிகளுக்கு மதங்கள் காப்பாகவும் இருக்கும் இந்நிலையில் மக்கள் முன்னேற்றம் எப்படி நடைபெறும்?

இறைமை என்பது மதங்களின் மூட நம்பிக்கைகளால் வளர்வதன்று. மாந்த இனத்தின் மீமிசை மனவியற் கோட்பாடு அது. அவ்வுணர்வு முழுவதையும் பார்ப்பனச் சார்புடையதாக்கி, முதலாளிய வாழ்வுக்கு அடித்தளமாக்கி, மக்களைச் சேறுக்கிக் குழப்பும் இந் நிலைகளிலிருந்து அவர்கள் மீட்கப் பெற்றே ஆகல் வேண்டும். அரசியல் அறம் எவ்வாறு தூய்மையானதோ அவ்வாறே இறைமையறமும் தூய்மையானது. ஆனால், அவ்வரசியலை எப்படி நூற்றுக் கணக்கான கட்சிகள் பங்கு போட்டுக் காலில் மிதித்துக் கொண்டு தங்கள் நலமே குறிக்கோளாக மக்களை அலைக்கழிக்கின்றனவோ,

www.thamizham.net - Free E book No 7505

அப்படியே இறைமையறத்தையும் ஆயிரக்கணக்கான மதங்கள் கூறு போட்டுக் கொண்டு, மக்கள் மனங்களையும் மூளைகளையும், இருட்புழைகளாகவும், நாற்றச் சேறுகவும் மாற்றி வருகின்றன. தூய்மையான இறையுணர்வு ஆரவார மற்றது! மூட நம்பிக்கையற்றது! வானம் போலும் களங்கமில்லாதது! கதிரவன் போலும் இருண்மை நீங்கியது! மழைநீர் போலும் தெளிவானது! அதுதான் அறம்! அதுதான் இன்பம்! அதுதான் பொதுமை! அதுதான் பொதுவுடைமை! அஃது, இவ்வுலகில் பிறந்த எல்லார்க்கும் உணவு, உடை, உறையுள் சமமாகக் கிடைக்க வேண்டும் என்னும் கோட்பாட்டினது! இதுதான் தமிழ்ச் சான்றோர் கொள்கை! எனவே, இதற்கு மாறான அனைத்து மத ஆரவாரங்களையும், மூட நம்பிக்கைகளையும் நேர்மையான அரசு துணிந்து எதிர்த்தல், தடுத்து நிறுத்தல் வேண்டும்! அஞ்சுதல் கூடாது! ஆட்சிக்காக, பதவிக்காகக் கொள்கையன்று; கொள்கைக்காகவே பதவி; ஆட்சி! முயற்சி வெல்க!

அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவா திதுகேள் மன்னுயிர்க கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்ட தில்லெனக் காவலன் உரைக்கும்!

(—மணிமேகலை: 25-228-31)

—பெருஞ்சித்திரனார்.

மிகவும் வருந்துகிறோம்

1. தகடூர் (தருமபுரி), வேனில் அச்சகம் உரிமையாளரும், தூய தமிழ்த் தொண்டரும், பெரியார் பற்றாளரும், பாவேந்தர் பாடல்களை மேடைதோறும் முழக்கித் தமிழுணர்வு வளர்த்தவரும், தென்மொழியன்பரும் ஆகிய புலவர் எழில்நிலவனார் அவர்கள் நெடுநாள் நோய்வாய்ப்பட்டுக் கடந்த 30-11-80-இல் மறைவுற்றார்கள் என்னும் செய்தி யறிந்து மிகவும் வருந்துகின்றோம். ஈடுசெய்ய முடியாத அவர் இழப்பால் ஆற்றொணாத் துயருற்றிருக்கும் அவர் மகனார் மணிவண்ணனுக்கும் அவர் குடும்பத்தார்க்கும் நண்பர்களுக்கும் தென்மொழி தன் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

2. தீவிரத் தென்மொழி யன்பரும், தொண்டரும், கட்டுரையாசிரியருமாகிய திரு. செம்பியன் வல்லத்தரசு அவர்களின் தந்தையார் கடந்த 29-11-80-இல் பு. புளியம்பட்டியில் காலமானார்கள் என்று அறிந்து வருந்துகிறோம். செம்பியன் வல்லத்தரசு அவர்களுக்கும் அவர் குடும்பத்தார்க்கும் தென்மொழி தன் ஆழ்ந்த இரக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

www.thamizham.net - Free E book No 7505

தென்மொழி இயக்கம் - அறிக்கை - 2

தென்மொழி இயக்கத்தை ஒரு வடிவமைப்பதற்கான நோக்கத்துடன் கடந்த இரண்டு இதழ்களிலும் தொடர்ந்து அறிக்கை வெளியிடப் பெற்று வருகின்றது. அதில் கொடுக்கப் பெற்ற விடு விடைப் படிவத்தை நாம் எதிர்பார்த்த அன்பர்களில் 35 விழுக்காட்டினரே நிறைவு செய்து அனுப்பியுள்ளனர். எதிர்பார்த்த, தென்மொழிக்கு மிக நெருக்கமான பலரிடமிருந்து இன்னும் படிவங்கள் வரப் பெறவில்லை அவ்வாறு அவர்கள் தயங்குவதற்குக் கீழ் வருபவை காரணியங்களாக இருக்கலாம் :

1. **'தென்மொழி'** தமிழ்நாட்டு விடுதலை நோக்குடையது. ஏற்கனவே நெருக்கடி நிலைக் காலத்தில். அக் கொள்கையால், அவ் விதழும் அதைப் படித்த, வைத்திருந்த பலரும் அச்சுறுத்தப் பெற்றூர்கள். எனவே அத்தகையதோர் இயக்கத்தில் வெளிப்படையாக உறுப்பினர் என்றில்லாமல் இருப்பது நல்லது'—என்ற அச்சம்.

2. **'தென்மொழி'**யைப் படிப்பதே போதும். தமிழ் வளர்ச்சியைப் பொறுத்த அளவில் அதில் ஈடுபடுவதே போதும். இன, நாட்டு முயற்சிகளில் நாம் ஈடுபடத் தேவையில்லை'—என்னும் பொதுவுணர்வின்மை.

3 தென்மொழியை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். அதற்கு நாம் பயன்படுவது கூடாது' என்னும் தந்நல நோக்கு.

மேற்கண்ட கருத்துகளில் மூன்றுவது கருத்துடையோரைப் பற்றி நாம் சொல்வதற்கு ஒன்றும் இல்லை. ஆனல் முதலிரண்டு கருத்துகளைக் கொண்டவர்களுக்குச் சில விளக்கங்களைக் கீழே தருகின்றேம்.

1. தென்மொழி மொழி, இன, நாட்டுக் கொள்கைகளைக் கொண்டிருந்தாலும், அம் மூன்றையும் ஒன்றுகவும் உடனேயும் செயற்படுத்த வேண்டும் என்ற நோக்கம் இல்லை. அவற்றிற்கு இயைபான கால, இடச் சூழல்களைப் பொறுத்தே, அவை படிப்படியாகச் செயற்படுத்தப் பெறும்.

2. எந்நிலையிலும் கருத்துப் பரப்புதல்களே தென்மொழி விரும்பும் முதனிலைக் கோட்பாடு. உடனே செயலில் இறங்கித் தென்மொழி தன்னையும் தன்னைச் சேர்ந்தவர்களையும் அழித்து விட முனைந்து விடாது.

3. விடு விடைப் படிவத்தில் அன்பர்கள் குறிப்பிடும் கருத்துகளைக் கொண்டே இயக்கம் தொடங்குவதும் தொடங்காததும் உறுதி செய்யப் பெறும். எனவே விடு விடைப் படிவம் உறுப்பினர் சேர்ப்புப் படிவம் ஆகிவிடாது.

4. மக்கள் மனப் போங்கு பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் **ஒரு கணக்கீடு முயற்சியே** விடு விடைப் படிவ வேண்டுதல். இதற்கே அஞ்சுபவர்கள் எதற்கும் பயனற்றவர்களே! இவர்களை வைத்து எவரும் எதுவும் செய்து விட முடியாது.

www.thamizham.net - Free E book No 7505

5. தனி யொருவர் முனைப்பால் மட்டும் எந்த இயக்கமும் உருப்பெற்று, ஒரு கொள்கையைச் செயற்பாட்டுக்குக் கொணர்ந்து விட முடியாது. தமிழ், தமிழினம், தமிழ்நாடு என்று சிலர் கூறுவது வெற்றுச் சொற்களா, அல்லது செயலுணர்வுடையில் வெளி வரும் பொருள் பொதிந்த சொற்களா என்று ஆராய்வதே முதலில் நம் நோக்கம். உள்ளவுரமும், செயல் முனைப்பும் இல்லாத எந்த இன மக்களும் முன்னேறவே முடியாதாகையால், அதற்கு மக்கள் நிலையை அறிந்து கொள்வது தேவையாக இருக்கிறது.

6. எனவே, முதலில் ஓர் அணி உருவாகட்டும்; அதைப் பார்த்துப் பிறகு நாம் சேர்ந்து கொள்ளலாம் என்ற மனப்பான்மையில் எவரும் இருக்க வேண்டா. அத்தகையோரும் இயக்கத் தோற்றத்திற்குப் பயன்பட மாட்டார்.

7. ஆயிரக் கணக்கான அரசியல், குமுகாய, தன் முனைப்பு இயக்கங்கள் தோன்றிச் செயலற்றுப் போனதும், போவதுமே தமிழக முன்னேற்ற முனைப்பு வரலாறாக இருந்து விட முடியாது. எனவேதான் எழுச்சியுற்ற மக்களின் கணக்கறியவும் அறிந்து செயலுக்கு அவர்களை ஊக்கவும் இம் முயற்சி தேவைப்படுகின்றது

8. இவற்றை நன்கு உணர்ந்து இதுவரை வினு விடைப் படிவம் நிரப்பி அனுப்பாதவர்கள், உண்மையிலேயே மொழி, இன, நாட்டு முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவர்கள், உடனே படிவங்களை நிரப்பி அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

9. இறுதியாக ஒன்று; உணர்வுள்ள மக்களின் ஒட்டு **மொத்தமான கருத்தறிந்த பின், தேவையானால் நாட்டு விடுதலைக் கொள்கை, கால மலர்ச்சிக்குத் தள்ளி வைக்கப் பெறும்.**

அன்பன்

பெருஞ்சித்திரன்.

தென்மொழி அணியில் மற்றொரு திங்களிதழ் வீறுடன் வெளிவந்து கொண்டுள்ளது

தமிழ்ச் சுடர்

பொறுப்பாசிரியர் : **மணிமுத்து**

தனி யிதழ் 60 காசு.

ஆண்டுக்கட்டணம் : 8—00

முகவரி :

தமிழ்ச் சுடர்

15 திலகர் தெரு, பொன்னகரம்.

பழனி : **624601.**

www.thamizham.net - Free E book No 7505

செய்திகள்

1. திருச்சி – திருவெறும்பூர் ஊரக நிகழ்ச்சிகள் :
நற்றமிழ்ப் பேரவை, திருச்சி-14—சிறப்புச் சொற்பொழிவு :

கடந்த தி. பி. 2011. துலை 24 (9-11-80)-ஆம் பக்கல் ஞாயிறு மாலை 6-30 மணி அளவில் நற்றமிழ்ப் பேரவை சார்பில் சிறப்பு நிகழ்ச்சி நடத்தப் பெற்றது. நிகழ்ச்சிக்குத் திட்டப் பொறியாளர் திரு. **ஆ. க. குமரன்** தலைமை தாங்கினார். திரு. **குழந்தை ஈகவரசன்** வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. **நாரா. மகிழ்நன்** முதல் கூட்ட அறிக்கை படித்தார். திருவாளர்கள் **அரசிறைவன், மேகநாதன்,** திருவாட்டி தமிழரசி ஆகியோர் உரையாற்றினார்கள். பின்னர் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் **'தமிழர் மெய்யறிவியல்'** எனும் தலைப்பில் அரியதோர் உரை நிகழ்த்தினார்கள். பல்வேறு வகைப்பட்ட அறிவு உணர்வு நிலையில் உள்ளவர்களும் இம் மெய்ப் பொருளுரையை இறுதிவரை செவிமடுத்தார்கள். தஞ்சை, திருச்சி, புதுகை, நெய்வேலி அன்பர்களும் வந்திருந்தனர். திரு. குணா நன்றியுரை ஆற்றினார். இப்பேரவை நிகழ்ச்சிக்குத் தோளாகவும் தூணாகவும் துணை நின்று ஏற்பாடு செய்தவர் அமைப்பாளர் திரு. **நாரா. மகிழ்நன்** ஆவார்கள்.

2. முக்குலத்தோர் மேனிலைப் பள்ளி, திருவெறும்பூர்—இலக்கியத் தொடக்க விழா :

சென்ற தி. பி. 2011, துலை 25 (10-11-80)-ஆம் பக்கல் மாலை 3-30 மணியளவில் முக்குலத்தோர் மேனிலைப் பள்ளியில் இலக்கியத் தொடக்க விழா திரு. வின்செண்ட் தலைமையாசிரியர் தலைமை தாங்க துவங்கிற்று. திரு. யோகராசனின் தமிழிசைக்குப் பின்னர் புலவர் பிச்சையா வரவேற்புரையாற்றினார். நற்றமிழ்ச் சங்கச் செயலாளர் இளங்காடு திரு. இராமலிங்கம் இலக்கிய மலர்கள் எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார். பின்னர் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** மாணவர்கள் மனங் கொள்ளும் வகையில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். புலவர் கந்தசாமியின் நன்றியுரைக்குப் பின்னர் விழா இனிதே நிறைவுற்றது.

3. பண்பாட்டுக் குழு, பயிற்சி நடுவ விடுதி எண் 2 : திருச்சி—14-சிறப்பு நிகழ்ச்சி :

அன்றே (10-11-80) மாலை 7 மணி அளவில் பயிற்சி நடுவ விடுதி அரங்கில் பயிற்சி நடுவத் துணை மேலாளர் திரு. **அரங்கராசன்** தலைமையிலும், துணை மேலாளர் திரு. **நாகராசன்** முன்னிலையிலும் நிகழ்ச்சி நடைபெற்றது. விடுதிக் காப்பாளர் திரு. **சக்கர**

www.thamizham.net - Free E book No 7505

பாணி வரவேற்புரை யாற்றினார்கள். பயிற்சியாளர் திரு. சு. இளங்கோவன் அவர்கள் பாவலரேறு அவர்களைப் பற்றியும், அவர்களின் மொழி இன நாட்டுத் தொண்டினையும் பல்வேறு அரசியல் குமுகச் சூழல்களுக்கிடையில் வீழ்ந்து கிடக்கும் மக்களை எழுச்சி பெறச் செய்யும் தொண்டினையும் விளக்கி அறிமுகவுரை யாற்றினார்கள். பின்னர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் "தொழிற் பயிற்சியும், வாழ்க்கைப் பயிற்சியும் எனும் தலைப்பில் பயிற்சியாளர்கள், பயிற்சி அதிகாரிகள், மனங் கொள்ளும் வகையில் வாழ்க்கை, தொழில் கூறுகளைப் பற்றி மிகவும் தெளிவாக எடுத்துரைத்தார்கள். பயிற்சி அதிகாரிகள் திருவாளர்கள் பே. சு. நாராயணசாமி, மாணவர்கள் இதுபோன்ற நிகழ்ச்சிகளை தொடர்ந்து கேட்க ஆவல் கொண்டுள்ளதாகவும், நிகழ்ச்சி மன நிறைவு உடையதாக இருந்ததெனவும் குறிப்பிட்டார்கள். இறுதியில் திரு. க. சிங்காரவேல் நன்றிகூற விழா இனிதே முடிந்தது. —செய்தி—தெ1 மாழி ஈகவரசன்.

பிற நிகழ்ச்சிகள்

'அந்தமான் முரசு' —12-ஆவது ஆண்டு நிறைவு விழா கிழமை ஏடு வெளியீட்டு விழா :

கடந்த 30-10-80 பிற்பகல் 6 மணியளவில், அந்தமான், போர்ட் பிளேயரில், அந்தமான் தமிழர் சங்கக் கட்டிடத்தில், சங்கத் தலைவர் திரு. கு. **பாலசுப்பிரமணியம்,** க. மு. அவர்கள் விழாத் தலைமை யேற்றார். அந்தமான் முரசு, பொறுப்பாசிரியர் திரு- **சுப. சுப்பிரமணியனார்** தொடக்கவுரை யாற்றினார். கிழமை ஏட்டை திரு. **க. கந்தசாமி,** வெளியிடவும், திரு. அ. க. இலிங்கவேலு ஏற்கவும் செய்தனர் திருவாளர்கள் வீ. வீரையா, இரா. சீ செகந்நாதன், து க கோபால், கா. வ. நன்மாறன், வே. சண்முகம், ஆறு. மாணிக்கம், சாலே உமர், ஆரூரான், கதி. மாணிக்கம், பாதரக்குடி பாலு, மா. இராசு, சாமியா (சேர்வை), ஆ. மு. வைத்தியநாதன், செ. இரத்தினசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார். திரு. சி. ந. வேலன் நன்றியுரைக்குப் பின் விழா இனிதே நிறைவுற்றது.

2. தமிழர் உரிமைக் கழகச் சிறப்புக் கூட்டம். உரத்தநாடு :

சென்ற 10-11-80 இரவு 7 மணியளவில், உரத்தநாடு தமிழர் உரிமைக் கழகத்தின் சிறப்புக் கூட்டம், தமிழகச் சுற்றுலா வாரியத் தலைவர் திரு. **துரை. கோவிந்தராசன்** அவர்கள் தலைமையில் நடந்தது. திரு. **சாமி. தவிடன்** அறி. இ. வரவேற்புரையாற்றினார். தமிழக சட்ட மேலவைத் துணைத் தலைவர், புலவர் திரு. **புதுமைப் பித்தன்** அவர்களும் திருவாளர்கள், புலவர். த. ச. தமிழனார், இரா. இரத்தினகிரி. இரா. பண்டரிநாதன், புலவர். சாமி சங்கரலிங்கம், கை. முகிலன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். திரு. ந. வை. இளஞ்செழியன் நன்றியுரைக்குப் பின் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது கூட்டத்தில் பெயர்ப்பலகை தமிழ்ப்படுத்த

www.thamizham.net - Free E book No 7505

வேண்டுகோள் முதலாக ஆறு தீர்மானங்கள் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பி வைக்கப் பெற்றன.

3. பாவாணர் இளைஞர் நற்பணி மன்றம்—புதுச்சேரி :

கடந்த 12-10-80 அன்று முற்பகல் புதுச்சேரி, தட்டாஞ்சாவடியில் 'பாவாணர் இளைஞர் நற்பணி மன்றம்' எனும் பெயரில் ஓர் இளைஞர் மன்றம் அமைக்கப் பெற்றது. தேர்ந்தெடுக்கப் பெற்ற மன்ற உறுப்பினர்கள் வருமாறு : சிறப்புத் தலைவர் க. தமிழ் மல்லன்; தலைவர் சு. தமிழரிமா; துணைத் தலைவர் கோ. கிருட்டிண மூர்த்தி; செயலர் கி. ஞானசேகரன்; துணைச் செயலர் இர. கலிய பெருமாள்; பொருளர் இல. வேலாயுதம். அன்று நடைபெற்ற முதல் கூட்டத்தில் தட்டாஞ்சாவடியிலுள்ள மாரியம்மன் கோவில் சந்து, ஐயனார் கோவில் சந்து, நான்காவது தெரு ஆகியவற்றுக்கு முறையே பெருஞ்சித்திரனார் தெரு, பாரதிதாசன் தெரு, வள்ளலார் தெரு என்று பெயரிடும்படி தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.

4. தனித்தமிழ்க் கழகம்—புதுச்சேரி, திருவள்ளுவர் விழா :

கழிந்த துலை ரு (19-10-80) மாலை, புதுச்சேரி, தனித்தமிழ் கழகம், முத்தியால்பேட்டையில் திருவள்ளுவர் விழா கொண்டாடியது. திரு **தமிழநேயன்** தலைமை தாங்கினார். திரு. க. **தமிழ மல்லன்,** க. இ. வரவேற்புரை யாற்றினார். திருவாளர்கள் **கதிர். தமிழ்வாணன்,** சேரன். அறி. இ; க இ, வை. தமிழேந்தி. புலவர் **அரிமதி தென்னகன்** ஆகியோர் உரையாற்றினர். கோபி வழக்கறிஞர் திரு. **கு. ச. ஆனந்தன்** வணி. இ; ச. இ. அவர்கள் 'குறளியம் படைக்கும் சமன்மைக் குமுகாயம்' எனும் தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தினார். திரு. சி. தமிழமாறன் க. இ. நன்றி கூற விழா இனிது நிறைவுற்றது.

5. திருக்குறள் மன்றம் - பல்லடம் :

பல்லடம் திருக்குறள் மன்றத்தின் சார்பாக 19-10-80 அன்று பல்லடத்தில் 'மக்கள் முன்னேற்றத்திற்கு மொழி உணர்வு தேவையா' என்னும் பொருளில் காலை 11 மணியளவில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. கருத்தரங்கில் தென்மொழி ந. **முத்துக் குமரன்,** திரு. **அருணாசலம்,** திரு. **சட்டநாதன்,** தென்மொழி **ப துரையரசன்** ஆகியோர் சிறப்புரையாற்றினர். சிறப்புரைக்குப் பின் ஐயம் தெளிதலுக்கென சிறிது நேரம் ஒதுக்கப் பெற்றது. மொழிக் கலப்பு பற்றிய பொதுவுடைமைத் தோழர்கள்கொண்டிருந்த தவறான கருத்துத் தெளிவாக்கப் பெற்றது. கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கிய திரு **கோ. ப. சீரங்கசாமி** தமது முடிவுரையில், மக்களினத்தை விலங்குக் கூட்டத்தினின்றும் வேறுபடுத்துவது மொழி யென்றும், மொழியை உணர்வு இயக்கமாகவும் உயிர்ப்புக்

(தொடர்ச்சி 16-ஆம் பக்கம்)

www.thamizham.net - Free E book No 7505

MY CRY ECHOING IN THE SKY

—Ma. Pozhilan.

A Bullet comes near, and nearer to me,
I can't hide anywhere, and can't stir or move,
My hands tied, legs join'd and can't remove
Not I home-sick now, but tear flows from eyes.

I think, not mother - rains love upon me,
Not think, myfather - protects, grows in best;
Not kin - bloods. love than the word means to me,
Not my darling, who dwells in my . . , my heart,
And I can't think any one, as think in rest.

But I think, in the short- one thing . . . . one thing . . . ,
I am sobing and was, for the same thing.
I beg. if anyone gives, for the only thing.
Everything is small, brief, minor, bit,
And little episodes before the thing.

Tear flows . . . flows . . . flows . . . flows . . from my blazing eye,
I think; my thing, my land - which is enslav'd.
I cry; no, heart cry; no, no, intuition cry,
The bullet flys . . . flys . . . flys . . . flys . . . from there to me.

My intuition push the blazing words to mouth.
They open my mouth, cry "TAMILLAND FOR TAMILIANS"
The bullet touches my body, screwing in it,
My expose . . . , reveal . . . , cry . . . , echoing in the sky.

உலகத் தமிழ் மாநாடு, மதுரை

சனவரி 1981-இல் நடக்கவிருக்கும் மதுரை உலகத் தமிழ் மாநாட்டில் தென்மொழி வெளியீடுகளும் நூல்களும், தென்மொழி, தமிழ்ச்சிட்டு பழைய படிகளும், தொகுப்புகளும் விற்பனைக்குக் கிடைக்கும்.

www.thamizham.net - Free E book No 7505

வானில் எதிர்ந்து ஒலித்த என் முழக்கம்

—மா. பொழிலன்.

துமுக்கிக் குண்டு ஒன்று என்னை நோக்கி நெருங்குகிறது,
மிக நெருங்குகிறது;
என்றால் எங்கும் மறையவோ, அசையவோ, விலகவோ முடிய வில்லை;
என் கை, கால்கள் விலக்க முடியா வண்ணம் கட்டப்பட்டுள்ளன;
நான் இக்கால் வீட்டுக் கவலை கொள்ளவில்லை;
ஆனால் கண்ணீர் பொங்குகிறது.
என் மேல் அன்புமழை பொழியும் என் தாயை நான் நினைக்கவில்லை;
எனைக் காத்து, நெறியொடு வளர்த்த என் தந்தையையும் நினைக்க வில்லை;
அன்பு - எனும் சொல்லினும் பொருளன்பு காட்டிய,
என் உடன்பிறந்தவர்களையும் நினைக்கவில்லை;
என் உள்ளுணர்வில் வாழும் என் அன்புக்குரியவளையும் நினைக்க வில்லை;
நான் ஓய்வுப் பொழுதில் நினைப்பேனே, அத்தகைய எவரையுமே
நினைக்கவில்லை.
ஆனால், அக் குறுகிய நேரத்தில், ஒன்றே —ஒன்றை நினைத்தேன்!
அதன் ஒன்றுக்காகத்தான் நான் விம்முகிறேன் —விம்மினேன்!
எவரேனும் கொடுப்பதாய் இருந்தால்,
அந்த ஒன்றுக்காக மட்டுமே, கெஞ்சுவேன்.
எப்பொருளும், அந்த ஒன்றின்முன் சிறியது; சுருங்கியது;
இளைத்தது; துணுக்கானது; குறுகிய கூறுகளாலானது.
என் அழலகின்ற கண்களின் வழி கண்ணீர் வழிகிறது! . . .
வழிந்து கொண்டிருக்கிறது.
நான், என் ஒன்றை—என்னின் அடிமைப்படுத்தப்பட்ட
நிலத்தை— நினைக்கிறேன்
நான் கதறுகிறேன்; இல்லை உள்ளம் கதறுகிறது;
இல்லை, இல்லை; உள்ளுயிர்ப்பு கதறுகிறது.
அந்தக் குண்டு என்னை நோக்கிப் பாய்கிறது . . . ,பாய்கிறது . . .
பாய்ந்து வருகிறது . . . !
என் உள்ளுணர்வு அனற்சொற்களை என் வாய்க்கு
உந்தித் தள்ளுகிறது.
அச் சொற்கள் என் வாயைத் திறக்கின்றன—
நான் கத்துகிறேன், **'தமிழ்நாடு தமிழருக்கே!'** . . .
அந்தக் குண்டு என் உடலைத் தொடுகிறது; அதனுள்
ஊடுருவிச் செல்கிறது.
என்னின் வெளிப்பாடு . . . , புறவெழுச்சி . . . !
முழக்கம் வானில் பரந்து ஒலித்தது . . . !

www.thamizham.net - Free E book No 7505

(13-ஆம் பக்கத் தொடர்ச்சி)
கருவியாகவும் கருத வேண்டுமென்றும், நமது மன வளர்ச்சி நமக்குத் தாய் மொழி கற்பிக்கப் பெறுகிற வகையில்தான் அமைகிறது என்றும் எடுத்துக் கூறினார். கூட்டம் பகல் 2 மணிக்கு இனிது நிறைவுற்றது.

6. தமிழ் இலக்கிய மன்றம் - திருப்பூர் :

கடந்த 26-10-80 திருப்பூர் தமிழ் இலக்கிய மன்றச் சார்பில் 'தமிழ் முல்லை' விளம்பர இதழ் வெளியீட்டு விழா, திரு. கு வெ கி. **ஆசான்** தலைமையில் நடைபெற்றது தென்மொழி **க. தமிழப்பன்** வரவேற்புரையாற்றினார். குறளியம் ஆசிரியர் திரு **வேலா. இராச மாணிக்கனார்** மலரை வெளியிட, திரு கு. ந. **சுப்பிரமணியம்** அவர்கள் மலரை ஏற்றுக்கொண்டார். திருவாளர்கள் மோகன் பி. கந்தசாமி, மில்லர் இரா. திருமூர்த்தி. மு. வேலாயுதம், இல செ. கந்தசாமி, குமர. நடவரச. ஈவப்பனார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கு. ந. கருப்புச்சாமி நன்றியுரையுடன் விழா இனிது நிறைவுற்றது.

நன்கொடைகள்

1. படைத்துறையைச் சார்ந்த கே கலியாணசுந்தரம் அவர்கள் தமது திருமண நினைவாகத் தம் நண்பர் த. சின்னதுரை வழி 11-10-80-இல் உரு. 5/-ஐ நன்கொடையாக அளித்துள்ளார்கள். அவர்க்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

2. கோவை மாவட்டம் தாராபுரம் க. அருணசலம் அறி. இ. அவர்கள் 3-11-80 இல் வரைவோலை வழி உரு. 10/-ஐ தென்மொழி வளர்ச்சிக்கென அன்பளிப்பாக விடுத்தார்கள். அவர்தம் தொண்டுள்ளத்தைப் பாராட்டுகிறோம்.

3. சென்னை-82, பெரம்பூர் மறை. திருநாவுக்கரசு அவர்கள் 4 11-80-இல் தென்மொழிக்கு நன்கொடையாக விடுத்த உரு. 15/-ஐ நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். அவர்தம் பொதுநல உணர்வைப் பாராட்டுகிறோம்.

4 கோவைத் தமிழாசிரியர் இரணியன் அவர்கள் தென்மொழி வளர்ச்சிக்காக நவம்பர் மாத நன்கொடையாக விடுத்த உரு 10/-ஐ அன்புடன் பெற்றுக் கொண்டோம். அவர்தம் தொண்டுள்ளத்தைப் பாராட்டுகிறோம்.

5, படைத்துறையைச் சார்ந்த மேகாலயா சாம்பசிவம் அவர்கள் உரு 5/-உம் தன் நண்பர்கள் திரு. காசிநாதன், திரு. இராசேந்திரன், திரு. இரங்கராசன் ஆகியோரிடமிருந்து முறையே 6+5+5=16-உம் நன்கொடையாகப் பெற்று 10-11-80-இல் அன்புடன் விடுக்கப் பெற்றுக் கொண்டோம். அவர்தம் அன்புள்ளத்தையும் பொதுநல உணர்வையும் மிகப் பாராட்டுகிறோம்.

www.thamizham.net - Free E book No 7505

வரலாற்றாசிரியர்களின் பார்வைக்கு!

—இரா. மதிவாணன், க. மு.

முறை மன்ற நடுவர்கள் என்றென்றும் நடுநிலை பிறழாதிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். அவ்வாறே வரலாற்றாசிரியர்களும் மண்ணின் மைந்தர்களைப் பற்றி வரலாறு வரையும்போது நடுநிலை பிறழாதிருக்க வேண்டும். வந்தேறிகளின் வரலாறே அந்நாட்டின் வரலாறாகவும், அவர்களால் அடிமைப்படுத்தப்பட்டு மிடியுற்றவர்களின் பண்டைய பெருமை மிக்க வரலாறு புனைகதையாகவும் வரலாற்றாசிரியர்களின் பார்வையில் படம் பிடிக்கப்படுகிறது. புகழ் பெற்ற நடிகனின் இயல்பான நடையும் ஒரு நடிப்பாகக் கருதப்படுவது போல, புகழ்பெற்ற வரலாற்றாசிரியர்களின் அறியாமைக் கூற்றுகளும் கூட வரலாற்று வடிவம் பெற்று விடுகின்றன.

கி. மு. ஏழாம் நூற்றாண்டளவில் பாபிலோனில் நாடாண்ட மன்னன் சென்னாகரிபு இந்தியாவிலிருந்து பருத்திச் செடி கொணர்வித்துத் தன்னாட்டில் பருத்திப் பண்ணை தோற்றுவித்தான் என்னும் செய்தியை ஏழாம் வகுப்புப் பாடப் பொத்தகத்திலும் வரலாற்றுச் செய்தியாக ஒப்பி வரைகிறார்கள். ஆயின், கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முன்பே சேர மன்னருள் அதியர் மரபைச் சார்ந்த அதியஞ்சேரல் கீழையிந்தியத் தீவங்களுள் இயற்கையாகவே கரும்பு விளைந்த (இன்றைய சாலமன்) தீவிலிருந்து கரும்புப் பயிரைக் கண்டுபிடித்துக் கொணர்ந்து நாவலந் தீவாகிய இந்தியாவுக்கு வழங்கிய வரலாற்றை எந்த வரலாற்றாசிரியரும் குறிப்பதில்லை.

கி. மு. 2100-இல் சுமேரிய மன்னன் அம்முராபி சட்டங்களைத் தொகுத்தளித்தான் என்று வரலாற்றாசிரியர் எழுதுகின்றனர். மக்களின் பொதுவாழ்வில் மட்டுமன்றி மறத்துறையாகிய போரில் கூட பொது அறத்துக்குப் புறம்பாகப் பொதுமக்கள் புண்படலாகாது; போர் வீரர் மட்டுந்தான் புண்பட வேண்டும், என்று உயரிய சட்டங்களை வகுத்தளித்த பழந் தமிழர்களின் அரசியற்சட்ட தொன்மையை உலகிற்கு எடுத்துக் காட்ட எந்த வரலாற்றாசிரியரும் இதுவரை முன்வரவில்லை. போர்க்காலத்தில் பொதுமக்கள் இலக்காகாத வகையில்,

. . . . "யாம்
அம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின்"

எனக் கூறும் சட்ட வொழுங்கு தமிழகம் தவிர உலகில் வேறெந்த தொன்முது நாகரிகத்திலும் இருந்ததாகக்கேள்விப்படவில்லை. இத்தகு உயர்ந்த மனப்பாங்கு வளர்வதற்கு முற்பட்ட அடிப்படை நாகரிகம் எத்துணையாயிரம் ஆண்டுகள் தொன்மையானதாயிருக்க வேண்டும்? எண்ணிப் பாருங்கள். அறிவு வளர்ச்சி கொடிகட்டிப் பறக்கும் இந்த இருபதாம் நூற்றாண்டில் கூட பொதுமக்கள் போரால் தாக்

www.thamizham.net - Free E book No 7505

குறுத வகையில் போர் முறை யொழுங்கு தோன்றவில்லை; இனி தோன்ற வாய்ப்புள்ளதாகவும் தெரியவில்லை.

உலகத் தொன்முது நாகரிகங்கள் கி. மு. 10,000 ஆண்டளவிலேயே முகிழ்த்துள்ளன. அமெரிக்க மாயர்கள் கி. மு. 9000 ஆண்டுகளுக்கு முற்பட்ட நாகரிகம் உடையவர் என்கின்றனர். நண்ணிலக் கடலடுத்த நாடுகளில் வதிந்தோர் கி. மு. 7000 ஆண்டளவில் எழுதப் படிக்கத் தெரிந்திருந்தனர் என்றும், கி.மு.4000-இல் பாட்டு எழுதினர் என்றும் கூறுகின்றனர். இன்றைய சோர்டான் (Jordan) நாட்டில் செரிகோ என்னுமிடத்தில் நடத்திய அகழ்வாய்வில் கி. மு. 10,000 ஆண்டளவில் கால்நடை வளர்ப்பும், வெயிலிற் சுட்ட செங்கற் கட்டட நகரமைப்பும் கொண்ட நாகரிகம் வளர்ந்திருந்தது எனக் கண்டுபிடிக்கப் பெற்றுள்ளது. கி. மு. 3000 முதலே சீனத்தில் நாடாளும் அரச மரபு இருந்தது. இவற்றையெல்லாம் வரலாற்றாசிரியர் தப்பாது வரைகின்றனர். தமிழரின் முன்னோர் கடல் கொண்ட குமரி நாட்டில் கி. மு. பத்தாயிரம்ஆண்டுகளுக்கு முன்பே (கி. மு. 10,520) பஃறுளி யாற்றங்கரையிலிருந்த தென்மதுரையில் தமிழ்க் கழகம் தொடங்கினர் என்றால் அது வரலாற்றாசிரியர்களுக்குத் திகைப்பாக இருக்கிறது.

எகுபது நாட்டுப் பாபிரசு ஓலைச் சுருளிலும் மெசபதோமியக் களிமண் முத்திரைகளிலும் கல்வெட்டுகளிலும் எழுதப்பட்டிருப்பதெல்லாம் வரலாற்றுச் செய்தியாக வரலாற்றாசிரியர் ஏற்றுக்கொள்கின்றனர். தமிழ் ஓலைச் சுவடிகளில் அல்லது தமிழிலக்கியங்களில் கூறப்படுவனவற்றை வரலாற்றுச் செய்தியாக ஏற்கத் தயங்குகின்றனர்.

கி. மு. 2380-இல் ஏற்பட்ட கடல்கோளால் இலங்கை தனித் தீவாகப் பிரிந்தது என்று மகாவம்சம் கூறுகிறது. இரண்டாம் தமிழ்க் கழகம் நடைபெற்ற கதவபுரமும் அக்கடல் கோளால் அழிந்தது. அதற்கு முன்பு 3700 ஆண்டுகள் இடைக் கழகமும் அதற்கும் முன்பு 4440 ஆண்டுகள் தலைக் கழகமும் நடைபெற்றன என்பதால், பாண்டியன் காய்சின வழுதி தென்மதுரையில் முதல் தமிழ்க் கழகம் தோற்றுவித்தது கி. மு. 10,520 (2380+3700+4440=10,520)-ஆம் ஆண்டில் என்றும், பாண்டியன் வெண்தேர்ச் செழியன் கதவபுரத்தில் இடைக்கழகம் தோற்றுவித்தது கி. மு. 6080 (2380+3700=6080)-ஆம் ஆண்டில் என்றும் பாண்டியன் முடத்திருமாறன் கடல் கோளுக்குப் பின் மணலூருக்குத் தமிழ்க் கழகத்தை மாற்றியது கி. மு. 2380-ஆம் ஆண்டிலென்றும், நானூறு ஆண்டுகளுக்குப் பின் மூன்றாம் தமிழ்க் கழகம் கி. மு. 1980-இல் இன்றைய வைகைக் கரை மதுரையில் பாண்டியர்களால் நிறுவப்பட்டது என்றும் தமிழ்க் கழகம் தோன்றிய காலங்களை வரையறுக்கலாம்.

www.thamizham.net - Free E book No 7505

அவ்வந்நாட்டு வரலாற்றை அவ்வந்நாட்டார்தாம் உருவாக்க வேண்டும். நம் நாட்டு வரலாற்றுசிரியர்கள், மேனாட்டார் யாராவது இங்கு வந்து ஆராய்ந்து எழுதிய பின் அதனை அப்படியே தெய்வத் திருமொழியாக ஏற்று வரலாறு எழுத முற்படுகின்றனர்.

பஞ்சாபு மாநிலத்துப் பள்ளியிறுதி வகுப்புக்கான (Matriculation) இந்திய வரலாற்று நூலில் (Golden History of India—தனியார் வெளியீடு) விந்தியத்திற்குத் தென்பால் வீர சிவாசி ஒருவன் தவிர வேறெந்தத் தென்னாட்டு முடிவேந்தர்களின் வரலாறும் கூறப்படவில்லை. அதைப் படிக்கும் வடபுலத்து மாணவர்கள் தென்னாட்டைப் பற்றி ஏதாவது தெரிந்து கொள்ள முடியுமா?

இந்திய வரலாறு தென்னாட்டிலிருந்து தொடங்க வேண்டும் என்று பேராசிரியர் சுந்தரனார், வரலாற்றுசிரியர் வின்சென்டு சிமித்து ஆகியோர் வலியுறுத்தினர். அதை வரலாற்றுசிரியர் மனங்கொள வேண்டும். இந்தியாவில் இன்று நிலவும் பண்பாடு, நாகரிகம், சமய ஒழுகலாறு சிவனிய மாலியக் கொண்முடிபுகள், கட்டடக் கலை, இசை, நாடகம் போன்ற நுண் கலைகள் ஆகிய அனைத்துக்கும் தமிழே மூலம் என்பதைத் தெளிவாக உணரும் வரலாற்றுசிரியரே தமிழக வரலாறு எழுதவும் இந்திய வரலாறு எழுதவும் தகுதியுடையவர்.

சமற்கிருதத்திலிருந்து இந்திய நாகரிகத்திற்கும் வரலாற்றுக்கும் மூலங்காண விழையும் வரலாற்றுசிரியர் குன்று முட்டிய குருவி போல இடர்ப்படுவர். ஆரிய திரவிட நாகரிகங்கள் கலந்த கால கட்டத்திற்கு முன்பு திருந்திய நாகரிக நிலையில் விளங்கியவர் தமிழரே. இஃதுணர்ந்தும் ஒன்றும் அறியாதவர் போல ஆரியச் சார்பானவற்றை இந்திய நாகரிகத்திற்கு அல்லது தமிழ நாகரிகத்திற்கு மூலமாக வரலாற்றுசிரியர் கொள்ளலாகாது.

பாலி, பிராகிருத நூற் சான்றுகளை வரலாற்றுசிரியர் தேட வேண்டுமேயொழிய சமற்கிருத நூற்சான்றுகளையல்ல. உலகத் தொன்முது நாகரிக ஆய்வேடுகளும், நாடுகாணிகளின் குறிப்புகளும் கல்வெட்டுகளும், அகழ்வாய்வுக் கண்டுபிடிப்புகளும், பழைய எழுத்துச் சான்றுகளும் வரலாற்றுசிரியர்க்குத் துணையாகவேண்டும்.

குறிப்பாகத் தமிழக வரலாறு எழுதுவோர் ஆரியச் சார்புடையவராக இருந்தால் அந்த வரலாறு ஆரியர் வரலாறாக இருக்குமேயன்றித் தமிழர் மற்றும் திரவிடர் நாகரிகத்தை எள்ளளவும் காட்டாது. இந்திய நாகரிகத்தின் ஆணி வேராகத் திரவிட நாகரிகம் அமைந்திருப்பதை எந்த வரலாற்றுசிரியரும் மறுக்கவோ மறைக்கவோ இயலாது. இதை வரலாற்றுசிரியர் உளங்கொள்வாராயின் வரலாறு மதிக்கத்தக்கதாயிருக்கும். o

www.thamizham.net - Free E book No 7505

சப்பானிய மொழியின் வேருக்கு மூலம் தமிழ்!

(The Roots of Japanese Language Traced to Tamil)

கடந்த சில திங்களாகச் சப்பான் நாட்டில் வெளியிடப் பெறும் பெரும் அறிக்கைகளுக்கு அடிப்படைச் செய்தியாக இருப்பது, **'சப்பான் மொழியின் அடிப்படை வேர் திரவிட மொழி; அதிலும் குறிப்பாகத் தமிழ்'** என்பது பற்றியதே. இக் கருதுகோளின் வளர்ச்சி சப்பானிய மாணவர்களாலும் அறிஞர்களாலும் மட்டுமின்றிச் சப்பானிய வரலாற்றாலும் அழுந்திய ஆர்வத்துடன் பின் தொடரப்பெற்று வருகிறது. எம்முறையிலேனும் சப்பானிய அறிஞர்கள் தங்கள் மொழி இனப் பண்பாட்டை அதன் தொடர்புடைய வேறொரு நாட்டின் பண்பாட்டுடன் பொருத்துவதன் அடிப்படையில் தங்கள் நாடு பிற நாடுகளுடன் கொள்ளும் தொடர்பு வளரும் எனக் கருதுகின்றனர்.

இதற்கு முன்பு நடத்திய ஆய்வின் விளைவாக, சப்பான் இனப் பண்பாடு ஒப்பற்றது என்றே முடிவு கட்டியிருந்தனர். தங்கள் தீவை இறைவன் படைத்தது என்றும், இங்குள்ள மக்கள் உலக மக்களினின்றும் தனி வேறுபட்டுச் சிறப்பாக இருப்பதாகவும் கருதிச் செம்மாந்திருந்தனர் அதன் பின்தான் மற்ற நாடுகளுடன் தங்களை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய நிலைகள் ஏற்பட்டன.

அந்நிலையில்தான் வேற்றுப் பண்பாட்டுப் பெருமைகளின் ஆட்சி தங்கள் பண்பாடுகளில் விரவியது கண்டு அதைப் பிரித்துத் தூய்மை செய்யத் தொடங்கினர். அவ்வாறு வேற்று நாட்டுத் தன்மைகளை விலக்கியதன் வழி, சப்பான் 1854-இல் ஒரு முழுத் தூய்மையான இனஞ் சார்ந்த நாடானது. அதன் பின் தங்களை இனங் கண்டு கொள்வதற்குரிய குறிக்கோள்களுடன் ஈடுபட்டனர். அந்நிலையில் பல்வேறு பண்பாடுகளின் ஓட்டத்தில் சப்பானையும் வைத்துவிட வேண்டும் என்பதில் முனைப்புக் காட்டினர்.

இரண்டாம் உலகப் போரினால் சப்பான் நசிந்த பின், அந்நாடு எல்லாவற்றிலும் வீழ்ச்சியுற்று, அதன் இனம் உலகத்து இனங்களினின்று பிரிவு பெற்றது அனைவர்க்கும் தெரிந்த ஒன்று. ஆயினும் சப்பான் தனது தனித் தன்மையின் முயற்சியினால், தானே எரித்துக் கொண்ட தன் சாம்பலினின்று உயிர் பெற்று எழுந்துவிடும் 'போனிக்சு' கற்பனைப் பறவையைப் போல், அழிந்த அடிச்சுவட்டிலிருந்தும் எழுந்து, பொருளடிப்படையில் உலகின் இரண்டாம் படியில் நின்று தன் பெருமையை வெளியிட்டது. இஃது ஒன்றே சப்பான் இனத்தின் ஒப்பதும் மிக்கதும் அற்ற தன்மையன்றோ?

மரபின் தொடர்பு (Genetic Relationship): சப்பானின் மொழி இன மரபுத் தொடர்பாக இரு வேறு கருதுகோள்கள் நிலவு

www.thamizham.net - Free E book No 7505

கின்றன. ஒன்று, சப்பான் மொழி நிகரற்ற நிலையில் தானே உருவானது. இது தோன்றிய இடமும் சப்பான்தான். எனவே 'சப்பான் மொழிக்கு வேற்று மொழி மூலத்தினின்று மரபுத் தொடர்பு படைக்க இயலாது' என்பது. இதனால் சப்பானிய மொழியியல் ஆய்வு முடிவுகள் சப்பானின் தனி மரபு என்றும், சப்பானைத் தவிர்த்த ஏனைய மரபு என்றும் இரு வேறாகத்தாம் பயன்பட்டன. **'சின் சோகு கான்கீ', 'சினென் கான்கீ'** என்று சப்பான் மொழியைத் தவிர்த்த ஏனைய மொழிகளுக்குரிய ஆய்வுகள், சப்பான் மொழிக்கு மட்டும் உள்ள ஆய்வுகள் எனப் பொருள்படக் குறித்தனர். **'கீடோ'** என்பது தொடர்பினது என்றும் மரபினது என்றும் பொருள் படும்

இஃது எவ்வாறாயினும் மற்றொரு கருதுகோள், சப்பான் மற்ற இன மொழிகளுடன் தொடர்புடையது என்பதற்கு மொழியியல் வழியாகச் சான்றுகள் காட்ட முயல்வதுதான். இதை மூன்று நிலையாகப் பிரித்தனர். அவை சப்பான் மொழி, 'அல்டாயிக்கு' குடும்ப மொழிகளோடு தொடர்புடையது என்பது; மலாய — பொலினேசியன் மொழிகளின் வேரினின்று தோன்றியது என்பது; அல்டாயிக்கும் மலாய—பொலினேசியன் மொழிக்கும் கலப்பானது என்பதும் ஆகும்.

இது தவிர்த்து, இப்போது புதியதொரு கருதுகோள் உயிர்பெற்று எழும்போது முதற் கருதுகோளான 'பிறமொழி மரபுத் தொடர்பு படைக்க இயலாது' என்ற பழைய தோக்கியோக் கருதுகோள் அடியோடு வளர இயலாது போய்விட்டது இப்போது தோக்கியோக் குறிக்கோள் மற்ற மொழியியல்களைப் போல் சப்பானிய மொழிக்கும் நிகரற்ற மொழியியலைப் படைப்பதற்கு முன் வந்தது போல் தோன்றுகிறது.

புதிய கருதுகோள் : இப் புதிய கருதுகோளைப் பேராசிரியர் **சுசுமு ஒனோ** என்னும் தோக்கியோவிலுள்ள காகுசியுன் பல்கலைக் கழகப் பேராசிரியரும், அவரைச் சார்ந்த அறிஞர்களும் முடிவெடுத்துள்ளனர். பேரா. ஒனோ பழஞ் சப்பான் மொழிப் பாடல்களைக் கணக்கற்றுத் தொகுத்து அம்மொழியின் ஒலியனியல் (Phonetics) ஆய்வு செய்தவர்.

ஒனோ வேறு சில அறிஞர்கள் சிலருடன் சேர்ந்து சப்பானின் பழைய வடிவத்திற்கு ஓர் அகரமுதலி தொகுப்பதில் சில ஆண்டுகள் ஈடுபட்டார். பழஞ் சப்பான் மொழியின் சொற் பிறப்பியலைத் தொகுப்பதற்காகப் பல மொழிகளின் சொற்பிறப்பியல் கூறுகளையும் அணுகினார்.

இதன் முடிவின் கண்டுபிடிப்பே பழஞ் சப்பான் மொழியின் சொற்கள் தமிழோடு மிகவும் தொடர்புடையன என்பது. இக்

www.thamizham.net - Free E book No 7505

கண்டுபிடிப்பிற்கு, அதே துறையில் பணியாற்றும் மற்ற மொழியியல் வல்லுநர்களும் சப்பானில் இவருக்கு ஊக்கமூட்டி யிருக்கிறார்கள். எவ்வாறாயினும் பேரா. ஒஓனோவின் இத்தத் தமிழ்—சப்பான் மொழித் தொடர்பு அவரின் ஆய்விற்கு ஒரு புதிய பாதையே ஏற்படுத்தியது எனக் கூறலாம். அவருக்கு முந்தைய சப்பான் சொற்பிறப்பியல் முயற்சிகள் சப்பான மொழியை மட்டுமே அடிப்படையாக வைத்துப் பெறுவன. இவை சரியாக இருக்க வழியில்லை என்றும், தமக்கு வெற்றியான முடிவுகள் திரவிட மொழிகளில்—அதிலும் தமிழ்ச் சொற்களை மேற்கோளாக வைத்து ஆயும்போது மட்டுமே கிடைக்கிறது என்றும் பேரா. ஒஓனோ விளக்குகிறார்.

தோற்றங்கள் : 1957-ஆம் ஆண்டு பேரா. ஒஓனோ வெளியிட்ட சப்பான மொழித் தோற்றம் என்னும் பொத்தகத்தில், 'சப்பான் மொழி 'அல்டாயிக்' மொழிக் குடும்பத்தோடு சேர்ந்ததாயினும் 'அல்டாயிக்' மொழிகளின் சொல் வரிசைகளைப் பொறுத்தவரைக் குறைவான தொடர்புதான் கொண்டது. அவ்வாறு கொரிய மொழியோடு தொடர்புடையதாயினும் பல சொற்கள் தெற்கினின்று தோன்றியிருக்கலாம்' என்று குறிப்பிடுகிறார்.

இக் குறிப்பிற்கு அவரின் இப்போதைய ஆய்வுகள் நிறைவு பெற்று சப்பான் மொழியின் தோற்றத்தைப் பற்றித் தெளிவான கருத்துகள் கூறுவதாக உள்ளன. பேரா. ஒஓனோவின் முந்தைய சொற்பிறப்பியல் முழுக்க முழுக்க வேறெந்த மொழி மேற்கோளும் இல்லாமல் சப்பான் மொழியையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஒஓனோவின் இப்போதைய அணுகுமுறைகளோ மொழியியல் அடிப்படையில் மட்டும் நின்றுவிடாது, மாந்தவியல் (anthropology), இனத் தொடர்பியல் (Ethnology) தொல்பொருளியல் (archaeology) முதலியவற்றின் அடிப்படையில் செல்கின்றன.

பேரா. **சுசுமு. சிபா** என்னும் ஒப்பியற் பண்பாட்டுத் துறையைச் சார்ந்த மற்றொரு பேராசிரியர், புத்தருக்கு முந்தைய காலத்துச் சமயஞ்சார்ந்த சொல் வரிசைகளைத் தொகுத்து அவற்றில் சப்பான்—தமிழ் மொழித் தொடர்புகளை ஆராய்ந்து வருகிறார். அந்தக் குறிப்பிட்ட காலத்து சமயப் பிறப்பிப்புகள் தமிழ் மொழிகளில் சொற்களாக இருப்பனவாக அவர் முடிவுரைத்தார்.

இந்தியாவில் சில ஆண்டுகளுக்குப் பிறகு பேரா. **உலோகேசு சந்தர்** சப்பானின் ஒலியன் கூறுகள் தமிழோடு மிக ஒத்து இருக்கின்றன என்று குறிப்பிட்டிருந்தார். தில்லிப் பல்கலைக் கழகத்தில் சப்பான் பயின்றுவரும் **பாலாம்மாள்** அம்மையாரும் தமிழ்—சப்பான் மொழி இலக்கணங்கள் மிகவும் ஒத்தவை என்று கூறியுள்ளார்.

பேரா. ஒஓனோ முழுப் புத்துணர்ச்சியுடன் மேற்கொண்டு இம்

www.thamizham.net - Free E book No 7505

முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். இது தொடர்பாக இந்தியத்துறை வல்லுநர்களுடனும் அறிஞர்களுடனும் உரையாட ஆர்வத்துடனும் இது தொடர்பான பல்வேறு கருத்துகளை அறியவும் முனைப்பாக உள்ளனர்.

இப்போது பேரா. ஒஓனோ சப்பான் ஒலிபரப்புக் கழகம் உருவாக்கும் தமிழ்க் கலைப் பண்பாடுகளுக்கும் சப்பான் கலைப் பண்பாடுகளுக்கும் இடையே உள்ள நெருக்கத்தைக் கூறுகிற விளக்கப் படத்திற்கு உதவும் வகையில் சிறு சுற்றுப் போக்கு நடத்துகிறார். மேற்கொண்டு இது தொடர்பாக ஆய்வதற்குத் தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் மற்ற இடங்களிலும் ஓராண்டாகிலும் தங்கி இத்துறை வல்லுநர்களைக் கண்டு. ஆராய்ச்சிக் கழகங்களுடன் தொடர்பு கொள்ளவும் இருக்கிறார். இத் தொடர்பு தமிழ் மொழியையும் இலக்கியப் பண்பாடுகளையும் சப்பானில் விளங்கிக் கொள்ள துணை நிற்கும். இத்தகைய மொழி, இலக்கியப் பண்பாட்டுப் பரிமாற்றங்கள் நம் நாட்டு அறிஞர்களையும் மொழி, இலக்கியம் மற்றும் ஒழுங்குக் கட்டுப்பாட்டுத் துறைகளில் சப்பான் நிலையை ஆராய ஊக்குவிக்கும் என நம்பப்பெறுகிறது.

பேரா. ஒஓனோ கழகக் காலத்துத் தமிழிலக்கியத்தையும் பழஞ் சப்பான் சொற்களையும் எடுத்துக்கொண்டு, இடையே உள்ள சொல் தொடர்புகளைப் பயன்படுத்தி இனி வேறு ஒரு முறையான நெறியைப் படைக்க முடியாது என்கின்ற அளவில் ஆராய்ந்து கொண்டிருப்பேன் என்று கூறியிருக்கிறார். இந்த ஆய்வினால் சப்பானிலும் பலவகைச் சிக்கலைத் தீர்க்க இயலும் என நம்புகிறார். அவையாவன:

அ) சப்பான் இனத் தோற்ற வரலாறு பற்றிய புதிய செய்திகள்.

ஆ) சப்பானின் உணவுக் கூலத்து நடவு முறைகளின் (Cultivation of food grains) வரலாறு.

இ) 'சப்பான்'—ஒரு தனி நாடு என்று அறிவித்தபோது புழக்கத்திலிருந்த மொழி.

ஈ) சப்பானின் கிளை மொழிகளின் உரிய பொருள்களும் அவற்றைப் பற்றிய விளக்கங்களும்.

சப்பான்—தமிழ்ப் பண்பாட்டுக் கலைகளிலும், மொழி, சடங்கு மற்றும் நம்பிக்கைகளிலும் ஐயத்திற்கிடமில்லாமல் பல ஒற்றுமைகளைக் காண முடிகிறது. இதற்கு இலக்கிய மொழியடிப்படைச் சான்றுகள் ஏராளமாக உள்ளன. எவ்வாயிருனும் தமிழ் மொழிப் பண்பாட்டுக் கலைகளினின்றுதாம் சப்பானிய மொழிப் பண்பாட்டுக் கலைகள் சென்றிருக்கின்றன என்ற நிலைக்கு இவ்வாய்வு சென்று

www.thamizham.net - Free E book No 7505

'ஓர்' - ஓர் ஓர்வு

—தமிழூர். ப. அருளி, வணி. இ; ச. இ.

'ஓர்' என்னும் வேர்ச் சொல் பொருந்துதல் கருத்தைத் திணுக்கமாக ஏற்று எங்ஙனம் பல்கிப் பரந்தது என்பதன் கோடுகாட்டலாக இக்கட்டுரை எழுகின்றது. தமிழ்ச் சொல் வளம் முறைமையாகக் கிளைத்துள்ள வகைமையை ஒருவாறு உணர இது துணைபுரியலாகும்.

'உல்' என்னும் மூல வேரினின்று முளைத்து உல்-ஒல்-ஒன்-ஒன்னு-ஒன்று ஆகிய நிலை, இதனின்றும் வேறானது. ஓர் என்பதன் படிவ மாற்றமே ஒரு என்பது. ஒலி பொருங்குக்கியைய உயிரெழுத்துத் தொடக்கமுள்ள சொற்களின் முன் வரும் 'ஒரு', 'ஓர்' ஆகுதல் வேண்டுமென்பது பழந்தமிழ் இலக்கண மரபு. (எ. கா: ஒருகால்) ஓர்:—ஓர் ஆ. பாவியல் உரிமையாகவும் (Poetic Liscence) உயிர் மெய்த் தொடக்கமாயுள்ள சொற்கள் சிலவற்றின் முன்னும் ஒரொருகால் 'ஓர்' விரவலும், ஒழிபியலுரிமை தந்து புலவர் குழாம் மருதேற்றலும் இலக்கியவுண்மை. (ஒ. நோ:—ஓர்:—ஓர்கோல் (796. குறள்), ஓர் சொல் (645. குறள்; ஓர் என்பது ஒப்பற்ற என்னும் பொருளையுந் தாங்கியுள்ளது என்ற புலவர் சிலரின் இலக்கிய நோக்கும் மகிழ்ந்து ஏற்கத் தக்கதே.

'உல்' எனும் வேரினின்றுங் கிளைத்த 'ஒன்று என்பது தனிப்பட எண்வகையுள் ஒன்றையே குறிப்பதேனும், ஒன்றுதல் எனும் பொருந்தற் கருத்தை உள்ளடக்கியிருப்பதைப் போலவே, ஓர் எனும் வேரும் ஒன்றுதல் எனும் பொருளையும் திணிந்து எண்வகையில் அதே ஒன்றைக் குறிப்பதாக அமைந்திலங்குகின்றது.

(முன்பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கிறது. அந்த கலைப் பண்பாட்டின் வலிவைத்தான் சப்பான் பயன்படுத்தி மற்ற உலகத்தினின்று பிரிந்து இருந்த போது தன்னிலையை உயர்வாக்கியிருக்கிறது என்ற ஒரு புதிய கருதுகோளும் இப்போது இடம் பெறுகிறது.

வரலாற்றுப் பதிவிற்கு முன்பே சப்பான் மற்ற நாடுகளுடன் வேற்றுப் பண்பாட்டால் செழித்திருந்தது என்ற பெரும்பான்மைக் கோட்பாட்டிற்குச் சப்பானின் ஆய்வுகள் வந்துவிட்டன. இந்தத் தமிழ்ப் பண்பாட்டை பொருளடிப்படையிலும் அரசியலடிப்படையிலும் அப்படியே வழிமுறைப் படுத்திய தொடர்பில் எஞ்சிய பண்பாடுகள் தாம் ஒளிரும் சப்பானின் இக்காலத்திற்கு அடிப்படையாகி மற்ற நாடுகளுடன் அந்நாட்டை இன்னும் இணைய வைக்கின்றன.

—பர், சாவித்திரி விசுவநாதன்,
('இந்து'—நாளிதழ்—12-9-80)
—தமிழில்: மா. பூங்குன்றன், க. மு.

www.thamizham.net - Free E book No 7505

ஒல்-ஒன்-ஒன்னு = பொருந்து. ஒன்னார்-பொருந்தாதவர், பகைவர், மாறுபாடுற்றவர். (ஒன்னார். 165, 264, 608, 630, 756, 821, 827 - குறள்). ஒல்-ஒன்-ஒன்னு-ஒன்று. . ஒன்று - ஒன்றியார் = பொருந்தியுள்ளவர், நெருங்கியோர், (886. குறள்). (மலையாளம்-ஒன்னு (ஒன்று).

ஓர்-ஒரு-ஒரு (= ஒன்று). ஒன்று என்பதும் ஒரு என்பதும் வேறு வேறு வேர் நிலைகளில் விளைந்தவை. ஓர் = ஒன்று. (ஓரெயில் மன்னன் ஒரு மட மகளே. 338. 12. புறம்; முரவுவாய் ஞாயில் ஓரெயின் மன்னன் 373 : அகம்.) ஓர் + எயில் + மன்னன் = ஒற்றை மதில் சூழ்ந்த நகரிடத்தேயுள்ள வேந்தன். (பழைய வுரை) ஓர் + அம்பு + ஓகியார் = ஓரம் போகியார். (கொக்குப் போலும் ஒருகால் தூக்கி, ஒரு கால் இருத்தி ஓகம் புரிந்து நின்றவர் 'கொக்கோக முனிவர்' என அழைக்கப் பெற்றது போலும், இவர் ஓர் அம்பைக் கையில் பிடித்தவாறே எப்போதும் இருந்தவராக இருக்கலாம்.) ஐங்குறு நூற்றில் முதனூறு பாடிய புலவர்.

ஓர்-ஓரி. ஒரு தனிச் சிறப்புடையான். (பெயர் வகையுளொன்று) கடையெழு வள்ளல்களிலொருவன். கொல்லிமலைக்கு உரியவன். ஓரி = ஒற்றைத் தனியாள்; தனி ஒருத்தி. 'ஆரிருட் கங்குல் அணியொடு பொருந்தி ஓரியா னுகுவ தெவன்சொல்'. அகம். 82 : 16, 17. ஓரி-ஓரியர். (புறம். 175). ஓரியரே, 'மோரியர்' என அழைக்கப் பெற்றனர் என, 'இலக்கியக் காலம்' எனும் தந் நூலுள் ஆராய்ச்சிப் புலவர். திரு. கோவிந்தசாமி அவர்கள் வலியுறுத்துவார்.

ஓரசைச்சீர் = நேரசையானுவது, நிரையசையானுவது வரும் அசைச்சீர். (சான்று; நாள்; மலர்). ஓர்-ஓராங்கு (ஓர் + ஆங்கு) = ஒரு சேர. ஓராங்கு நாளைச் செய்குவனமரெனக் கூறி (304 : 5, 6. புறம்) உரை-நாளை ஒருசேரப் பொருது அழிப்பேன் என்று வஞ்சினங் கூறி. . . .) ஓர்-ஓரட்டும்-(முழுமையும், எல்லாம்) உலகம் ஓரட்டும் சுற்றிப் பார்த்தாலும் இவளைப்போல் பெண் கிடைக்கமாட்டாள். (உலக வழக்கு).

ஓர்-ஓரம் = தனிமை, கரை, பக்கம், விளிம்பு, ஒரு பக்கம் சாய் நிலை (Parliality), நடுநிலை திறம்பல். மன்றோரஞ் சொன்னார் மனை (23. நல்வழி).

ஓரக் கண்ணன்-சாய்வான பார்வையுள்ளவன். ஓரம் பேசல்-ஒரு பக்கமாகத், திரும்பிப் பேசுதல். ஓரவாரம்-ஒரு பால் கோடல்.

ஓர் = ஒன்று, பொருந்து. ஓர் ஓரை = ஓர் இடைச்சொல். (பிங்). (a Connective particle.)

www.thamizham.net - Free E book No 7505

ஓரம்-தெலு :—ஓர. கண் :—ஓர. மலே :—ஓரம். கோத்நம் —ஓரி (கரையை அடுத்துள்ள இடப் பரப்பு). Latin :—Or-(ஓரம்). Oration-கரைபிடித்தோடி, கரையோரம் சென்று. Orari-us கரையின், கடலோரத்துக்குரிய.

ஓரம் - கரை, ஓரம், விளிம்பு Latin-Ora-ஓரம் Ora—(borderr brim, coast, shore). 1. Entom. The inflexed or inferio, lateral margin of the parthorox. 2. The edge or border an ulcer. (P. 167, 168 Vol. VII Ox. Dic) Orarian—F. L. Orarius of or belonging to the Coast, F. Ora border, Coast + AN) a. adj. of. pertaining to, or dwelling on the coast. b. A dweller on the sea-shore. (P. 172. Vol VII Ox. Dic.)

ஓர்—ஒன்று, பொருந்து. ஓர்-ஓரை—மகளிர் கூட்டம், மகளிர் விளையாடுங் களம், குரவை (கூடியாடும் ஆட்டம்).

ஓர்-ஓரை—நேரம், முழுத்தம் (முகூர்த்தம்). (பொருந்துதல் என்னும் பொருள் பொருந்திய நேர் என்னும் சொன்முதனிலையினின்று, 'நேரம்' என, காலப் பகுதியைக் குறிக்க சொல் எழுந்தமையையும் பொருத்திப் பார்க்க!)

ஓர்-ஓரை—நேரம். ஓரையு நாளுந் துறந்த வொழுக்கம் (தொல். பொ. 135). மங்கலப் பெருங்கணி வகுத்த வோரையான் (சீவக. 2411). விடிவோரையிலெழுந்து-(குருபரம் 115. பன்னீ.)

ஓரை—நேரம் Gk. hora-time. Gk. horologion. ME. OF. orloge. (Time piece, clock, dial). Eng: horoscope-Astrol-Observation of sky and planets at certain moment esp. at person's births (P. 518. C. OD)

ஓர்-ஓரை—விண்மீன்களின் கூட்டம். (Constellation of stars). கோள் வீதியின் கிழக்குப் பக்கமுள்ள (South of Zodiac) விண்மீன் பெருங் குழுவின் தோற்றம், கச்சையும் (belt) வாளும் அணிந்த ஒரு வேட்டைக்காரன் போன்றிருப்பதைக் கண்ணுற்று, கிரேக்கர் தம் தொல்பழங்கதையுள் (Mythology) 'ஓரையோன்' (Latin and Greek, ORION) என்னும் பெயருடன் ஓர் அரக்கனைப் படைத்தனர்.

ஓர்-ஓரி—ஆண் மயிர் (2 . 99. சூடா. நி; திவா:), குதிரைப் பிடரி மயிர். ஓரி நுடங்க (164. பொருநரா).

ஓரி-ஆடவர் மயிர். ஐம்பான் வகுத்த கூந்தன் மடவீர்; ஐவகை வகுத்த கூந்தல் ஆய்நுதல் மையீர் ஓதி மடவீர் (அகம். 48) போலும் நிரம்பிய இலக்கிய வழக்குகளால், பெண்டிர் தம் கூந்தலைப் பன் வகைப் பிரிவாகப் பின்னி அணி செய்து கொண்டமையும்

www.thamizham.net - Free E book No 7505

ஆடவர் ஒட்டுமொத்தமாக வாரி ஒருசேர முடிந்துகொண்டமைம் தெளியத் தெரிகின்றது. ஒ. நோ:—வாரி நெறிப்பட்டு இரும்புறயும் தா அழ்ந்த ஒரிப் புதல்வன் அழுதனன் என்பவோ? (கலி. 14,1:2)

ஓர்-ஓர்த்தல் (பொருந்துதல்) கேட்டல், கூர்ந்து கேட்டல். உற்றுக் கேட்டல்.. 'கேள்' என்னும் முதனிலைச் சொல் பொருந்துதல் என்னும் பொருள் திணிவு உடையதாகும். கேள் (பொருந்து)— கேள்வன்—கணவன், உள்ளத்தொடு பொருந்தியவன் (கலி: 31 : 16), துணை (எம் கேள் போல் (உரை: எம் துணை போல்) (1222. குறள்). கேள்-கேளிர் (32 : 8 : கலி) பொருந்திய சுற்றத் தார். கேள்-கேண்மை—அன்பு, உறவு, அன்புறவால் எழும் உரிமை. கேள்-நட்பு (808. குறள்) கேள் போல் பகைவர் தொடர்பு. (882 குறள்). இன்னவாறு, பொருந்துதல் பொருள் கொண்ட 'கேள்'. செவிப்புலத்தொழிற்கும் ஆகியுள்ளமை வெளிப்படை யுண்மை. (கேள்வி—கேட்டல்). அன்னவாறே பொருந்துதல் பொருள் கொண்ட 'ஓர்' என்பதுவும் கேட்டல், உற்றுக் கேட்டல் எனும் பொருள்கட்கும் பரந்து ஆயது.

ஓர்த்தல்—கேட்டல், செவி கொடுத்துக் கேட்டல், கூர்ந்து கேட்டல். பல்கால் பறவை கிளை செத்து ஓர்க்கும் (183. பெரும்பா) ஓர்க்கும்—செவி கொடுத்துக் கேட்கும் (நச். உரை). விடர் முழை இரும்புலிப் புகர்ப் போத்தோர்க்கும் (புறம் 157 . 11, 12). உரை:- விடராகிய முழையின்கண் கிடக்கின்ற பெரும் புலியாகிய புகர் நிறத்தினையுடைய ஏறு செவி தாழ்த்துக் கேட்கும்). குரல் ஓர்த்து தொடுத்த சுகிர் புரி நரம்பின் (23. மலைபடு). ஓசையை 'ஓர்ந்து' பார்த்துக் கட்டின வடித்து முறுக்கின நரம்பினையும் (நச். உரை). பாடல் ஓர்த்தும் நாடகம் நயந்தும் (113. பட். பாலை) பாட்டைக் 'கேட்டும்' நாடகங்களை விரும்பிக் கண்டும். (நச். உரை). புலரி விடியல் புள் ஓர்த்துக் கழிமின் (448. மலை. படு) புள்ளோர்த் தென்ற தற்குப் புட்களின் குரல் 'கேட்டுப்' போவீர் என்றுமாம். (நச்.உரை). திரிபுரி நரம்பின் தீந்தொடை யோர்க்கும் (254. பட். பாலை). இன்பல் இமிழிசை யோர்ப்பனள் (88. முல்லைப் பாட்டு). எப்பொரு ளும் ஓரார் (695 குறள்) ஓரார்: செவிசாய்த்து உற்றுக் கேளார்.

கோத்தம்:—ஓரித் (உற்றுக் கேள்).

'ஓர்' எனும் வேரினின்றும் தோன்றிய ஓர்த்தல் (கேட்டல்) தொழிலுடை உறுப்பான செவிக்கு, பல மேலைய மொழிகளும் அச் சொன் மூலத்தைப் பயன்படுத்திக் கொண்டமையைப் பின்வருவன வற்றை ஒப்பு நோக்கி அறிக.

(Latin): Auricul-காது, செவி. Auris-காது. Auriteatis- காதால் கேட்ட சான்றுளன் (சட்) (Lat. Dic) (English:) Auricle

www.thamizham.net - Free E book No 7505

(L). auricula dim of. of auris—ear—more at ear. So called frequently a resemblance to the external ear of some quadrupeds. 2. an angular or 'earlike lobe' or process. auricular-(New Latin)—frequently external ear. auriform-shaped like the human ear (Web. Dic. P. 144) aurel-pertaining to the ear or the sense of hearing auricular. L. auris-ear. Aurilave-An instrument with which to clear the ears. Auriscope-An instruement for examining the ear.

M. E. ere OE. eare akin to O. H. G Ora 'ear'. ON. eyra. Latin. auris-ear.

கேட்டல் வினை, அறிவுக்கு வலிவும் ஏற்றமும் விளைத்தலும் அஃது எண்ணுதற்கும் ஆய்தற்கும் பெருந்துணையாதலும் தெளிபு. கேள்வி (அதி 42) எனும் அதிகாரத்துள் வரும் திருக்குறட் பொருள்கள் யாவும் அவற்றின் பயனையும் இன்றியமையாமையை யும் தெட்டத்தெளிவாகக் காட்டுகின்றன. 'எனைத் தானும் நல்லவை கேட்க வனைத்தானு மான்ற பெருமை தரும் (416), கற்றிலனாயினுங் கேட்க (414), செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் (411), நுணங்கிய கேள்வியர் (419) என வரும் குறள்கள் கேட்டலின் பெரும்பயன் இன்னவென குன்றுமிசையிட்ட விளக்கம் போல் ஒளிர் விக்கின்றன.

கேட்கும் வினையால், ஆய்வு, அறிவு, ஆய்ந்தறிதல், தெரிந் தெடுத்தல், நினைத்தல், எண்ணுதல், தெளிதல், உறுதியாதல் போலும் உள வினைகள் ஒன்றேனும் பலவேனும் உருவாதல் இயல் பாதலின் அப் பொருட் பரப்புகளையும் 'ஓர்' என்னும் சொல் ஏற்றுப் பல்கியது.

ஓர்-ஓர்த்தல்—ஆராய்தல் 'எண்பதத்தான் ஓரா முறை செய்யா மன்னவன்' (548. குறள்) ஓரா-ஓர்ந்து என்பதாம். செய்யா என்ற வாய்பாட்டு உடன்பாட்டு வினையெச்சம். நாடுதல்; ஆராய்தல். ஓர்ந்து கண்ணோடாது (541. குறள்) ஓர்ந்து—தன் கீழ் வாழ்வார் குற்றம் செய்தால் அக் குற்றத்தை 'நாடி'... காளிங்கர் உரை யில்: —ஓர்ந்து—வேந்தனானவன் தனக்குத் தகுதியும் தகுதி அல்லா மையையும் ஆராய்ந்து. தெளிய ஆராய்தல். ஓர்த்துள்ளம் உள்ள துணரின் (357. குறள்) ஓர்தல்-ஒருதல்—ஆய்தல், தெளிதல், உணருதல்.

ஓர்ச்சி-ஆராய்ச்சி, கருதுதல், தெளிவாக ஆய்தல். உற்றுக் கேட்டல், எண்ணக் கருதுதல். ஓர்ப்பு—ஆராய்ந்துணர்கை, (2 : 29. இறை. அகப்பொருள்). ஆடூஉக் குணம் நான்கினொன்று. தெளிவு, பொறை, ஆய்ந்து தெளிகை 'நிறைபொறை ஓர்ப்பு கடைப்பிடி மையல்' (நன்னூல்). ஓர்வு-ஆராய்தல், தெளிதல், ஆய்

www.thamizham.net - Free E book No 7505

சாதியும் சமவுடைமையும்

—செம்பியன். வல்லத்தரசு.

சாதி பற்றி, அதன் தேவை—தேவையின்மை பற்றி இன்று எப்பொழுதையும் விட நிறையவே எண்ணப்படுகிறது. பேசப்படுகிறது. ஓரளவு அறிவு முயற்சி உள்ளவர்களும் சாதி என்ற மாயையின் வல்லமையையும் இழிவையும் எண்ணி வெறுத்தாலும், பழக்கம், தாம் பெறும் குழுகாய மதிப்புகள், சலுகைகள் காரணியமாக அதன் அழுத்தமான பிடிப்பிலிருந்து விடுபட விரும்பாமல் சாதியின் தேவைப் பற்றி வலிந்துரைகள் பல கற்பித்துத் தம் நிலையைச் சரி எனக் காட்டவே முயல்கின்றனர் துணையாக, கண்ணதாசன், செயகாந்தன் போன்ற எழுத்துலக மேதைகள்(!) சிலர், சாதியமைப்பின் பெரும் பெருமியங்களையும் (மகாத்மியங்களையும்). அதனைப் படைத்த வேதமுனி (வேதரிஷி)களின் மேன்மைகளையும் தம் கொழுவிய மூளை அணுக்களால்!) உய்த்துணர்ந்து, இந்தியாவின் — இந்து மதத்தின் 'அர்த்த' முணராத இளைஞர்களைத் தடுத்தாட்கொள்ளும் பணியில் முனைந்து ஈடுபடுகின்றனர். மூலவர்களும் முனிவர்களும் இக் காவலர்களுக்குப் பரிசில்களும் அருள் உரைகளும் தந்து வாழ்த்துகின்றனர்.

இஃது இவ்வாறாக, சாதி ஒழிப்புக் கொள்கையைத் தாலிகட்டி ஏற்றுக்கொண்ட நமது 'தலைவர்கள்', தங்கள் கட்சி வேட்பாளரைப் பொறுக்குவதிலும், அமைச்சர்களை எடுப்பதிலும், மக்களுக்குச் சலுகை வழங்குவதிலும் சாதியை அளவுகோலாகக் கொள்வதோடு, சாதி மாநாடுகளில் கலந்து கொண்டு, அச் சாதிகளின் பெருமைகள் பல கூறி அதன் துணைவர்களாக அம் மக்களிடம் கைதட்டல் பெற்றுக்கொண்டு சாதியொழிப்புப் பற்றியும் மூச்சு விடாமல் பேசத்தான் செய்கின்றனர். இவை யெல்லாம் உங்களுக்குத் தெரியும் தாமே? எனவே, நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

(முன்பக்கத் தொடர்ச்சி)

தல், உணர்தல். ஓர்வு-தெளிவு ஆராய்கை. ஓர்மம்-மனத்திடம், மனவுறுதி, நினைவு, எண்ணம், ஓர்மை. ஓர்மை-எண்ணம். நினைவு, கருதுகை, திடம். (ஓர்மகல் மரிக்குமோ? —(நினைவுகள் இறக்குமோ?) ஒரு மலையாளத் திரைப்படம்)

ஓர்-ஒரு என்பது தெலுங்கிலும் கன்னடத்திலும் 'ரோயு' எனத் திருப்பொலிப்பு செய்யப் பெற்று, ஆய்தல். ஆராய்தல், உற்றுப் பார்த்தல் எனும் பொருள்களில் பயிலப் பெறுகின்றது. (மலை) ஓர்க—(எண்ணு நினை, எதிர்பார்). ஓர்ம்ம—நினைவு, திரும்பு எண்ணுதல், எண்ணம்). (கன்)-ஒரு-(எண்ணு உசாவு, கேட்டறி, ஆழ்ந்துணர். 0

www.thamizham.net - Free E book No 7505

தமிழினத்தைச் சாதியமைப்பு சிதைத்த வரலாறு உங்களுக்குத் தெரிந்ததுதான். தமிழர் பண்பாட்டிற்கும் மெய்ப் பொருளியலுக்கும் எதிரான, எனினும் அதன் சாயலை வருவித்துக் கொண்ட, வேத அடிப்படையான ஆரியரின் வைதிக மதத்தின், இந்து மதத்தின் நரம்பு மண்டலமே இச் சாதியமைப்பு. இந்து மத அடிப்படையிலான இச் சாதியம் முழுமையும் ஒரு குமுகாய அமைப்பன்று. (**Not purely a rocial institution**). ஆனால் தமிழர் வகுத்துக் கொண்ட நாற்பிரிவு, தொழில் அடிப்படையான ஒரு குமுகாய அமைப்பு. இதனை முதலில் நாம் தெளிவாக்கிக் கொள்ள வேண்டும். எனவே இவ்விரண்டின் (இந்து மதம்—சாதியமைப்பு) இருப்பும் அழிவும் ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன.

இந்தச் சமயங்களும், அவற்றைக் காத்து நிற்கும் இச் சாதியமைப்பும், இந்நிலைகளை நயன்மைப்படுத்தும் புராணங்களும், கலை, இலக்கியங்களும் எல்லாம் நிலவுடைமை யமைப்பில் வேர் விட்டு வளர்ந்தவை. தொல் பொதுமை, அடிமை முறை, நிலவுடைமை. முதலாளியம் என்ற ஒவ்வொரு பொருளியல் அமைப்புகளுக்கு ஏற்ற வாறும் அவற்றின் மேற்கோப்புகளாகவே சாதி முதலிய மேற்காட்டியவை மாற்றமும் வளர்ச்சியும் பெறுகின்றன, இஃது ஒரு பொது அமைப்பு எனினும் மண்ணுக்கும் மக்களுக்கும் ஏற்பச் சில மாறுதல்களையும் பெறும்.

தமிழகப் பொருளியலமைப்பு, நிலவுடைமை வரை முறையான இயல்பான வளர்ச்சி நிலையைக் கொண்டிருந்தது. மற்ற மக்களினத்தை விட, மொழி, நாகரிக, பண்பாட்டு நிலைகளில் முன்னின்றதால் அவ் வளர்நிலை மற்ற நிலங்களை விடவும் இங்குத் தெளிவாகவும் சிறப்பாகவும் விளங்கியது. நம் வரலாறும் இலக்கியங்களும் காட்டுவது இவ்வாய்மையே. அதன் இடையிலேயே வேத மதத்தின் தாக்கம் பெற்று மொழி, இன இழிவு நிலைகள் தோன்றி வளர்ந்து நிலைத்து விட்டன. சோழர் வீழ்ச்சிக்குப் பின் வந்த பல்லவர் காலந் தொட்டு அடிமை வாழ்வு பெற்ற தமிழகத்தின் வரலாறு இருண்டே கிடந்தது.

நிலவுடைமையிலிருந்து பொருளியலமைப்பு படிநிலையான முதலாளியத்திற்கு மாறும் வாய்ப்பும், காலமும், முதிர்ச்சியும் அடையாத நிலையில்தான், வெள்ளையர் நம்மை அடிமைப்படுத்தினர். அவர்களது குடியேற்ற நிலமாகவும், சந்தையாகவுமே இந்நாடு பயன்படுத்தப்பட்டதால் தொழில்துறை வளர்க்கப்படவில்லை. ஓரளவு தேசிய முதலாளிகள் முயற்சியில் முதலாளியம் முளைவிட்டிருந்தாலும், அஃது இயல்பான வளர்ச்சி பெறுவது தடுக்கப்பட்டது நாட்டு விடுதலைக்குப் பின்னரே ஓரளவு அது வளர்முகமடைந்தது.

முதலாளிய அமைப்பில்தான், சிற்றூர் சார்ந்த நிலக்கிழார்—பண்ணையார் சார்புக்கும் அது தொடர்பான அரசியல், குமுகாய,

www.thamizham.net - Free E book No 7505

பொருளியல் நிலைகளும் கட்டுத் தளர்ந்து முதலாளி—தொழிலாளி என்ற புதிய உறவும் அதன் விளைவாக ஒரு புதிய குமுகாய பொருளியலமைப்பும் ஏற்படும். ஆனால் அந்நிலை இங்கே முழுமையாகவும் இயல்பாகவும் முதிர்ச்சி யடையவில்லை. உழவை முதன்மைப் படுத்தியதாலும், தொழில் துறை வளர்ச்சி பெறாததாலும் இந்நாடு இன்னும் ஓர் அரை நிலவுடைமை—அரை முதலாளிய அமைப்பாகவே இருக்கிறது. நிலவுடைமையின் வேர்களான சமயம், மதம், சாதியமைப்புகளின் எச்சங்கள் இன்றும் நம்மை அழுத்தித் திணறடித்துக் கொண்டிருப்பதற்கான காரணியம் இதுவே.

இங்கே இன்னொரு சிக்கலைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டியிருக்கிறது. நிலவுடைமையின் எதிர் நிலைகளாக (முரண்பாடுகள்) நிலக்கிழாரும் தேசிய முதலாளிகளும் வளர்ச்சி யடைந்து, நிலவுடைமையின் அழிவில் முதலாளியம் நிறுவப் பெறுவதேபோன்று, முதலாளியத்தின் முரண்பாடுகளாகத் தொழிலாளி—முதலாளி உறவு கூர்மையடைந்து. வெடிக்கும் வகுப்புப் போரில், முதலாளியம் சிதைந்து, தொழிலாளர் வல்லாண்மை அரசைக் கைப்பற்றும். ஆனால் இங்குள்ள அரை நிலவுடைமைய்மைப்பில் தொழிலாளி—முதலாளி வகுப்பு முரண்புாடு வளர்ச்சி பெற்றிருக்கிறதா என்று கேட்டால் 'ஆமாம்' என்று பெரிதாகக் கூறுவர், கொடி பிடித்துப் பஞ்சப்படி கேட்பதுதான் மார்க்சியம் என்னும் ஒரு கூட்டத்தார் முதலாளியம் வளரவில்லை யெனினும் உழவாளிகளின் தலைமையிலேயே பொருளியல் புரட்சி வெடித்துச் சமவுடைமை அமைப்பு ஏற்படும் என்றும் ஒரு கொள்கை உருவெடுக்கிறது. நிலைமை இப்படியிருக்கவும், அப் பொருளியல் புரட்சிக்கான முன் முயற்சிகள் முறையாகச் செய்யப் பெறாமல் தொழிற் கழகங்களுக்குள்ளேயே (Trade Union) வட்டாடிக் கொண்டு, வகுப்புப் போராட்டம் பேசி மக்களிடம் கண்கட்டு வேடிக்கை காட்டும் கட்சிகளின் நிலைகளை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

மார்க்கசியலார் என்று தம்மை அழைத்துக் கொள்வோர் சாதி உள்ளிட்ட குமுகாயக் கேடுகளின் அழிவுக்கு ஒரே வழி பொருளியல் புரட்சியும், சமவுடைமை அமைப்புமே என்பர். இது மார்க்சையும் மக்களியலையும் புரிந்து கொள்ளாத அறியாமையே. **மக்களின் எந்தவொரு சிக்கலுக்கும் பொருளியல் ஒன்றே தீர்வு என்று கட்டும் கட்டுவதை 'பொருளியற்படுத்தம்' என்ற குற்றமாகக் கண்டிக்கிறார் மேதை இலெனின். மேலும் சாதி ஒரு குமுகாயச் சிக்கல். இதற்குப் பொருளியல் தீர்வு ஒரு முடிவாகாது.** இது மேலும் குழப்பத்தையே உண்டுபண்ணும். பா. அம்பேத்கார் அவர்கள் சாதிக் கொடுமையிலிருந்து விடுபட, இந்து மதத்தைத் துறந்து வேறு மதம் தழுவ எண்ணி, இசுலாமியத்தைத் தேர்ந்ததும்,

www.thamizham.net - Free E book No 7505

காந்தியாரின் தொடர்ந்த வற்புறுத்தல், வேண்டுகோள்களின்பேரில் புத்த மதத்தை (அதுவும் இந்துமதக் கிளையாக்கப்பட்டது; புத்தர் திருமாலின் ஒரு தேவ இறக்க (அவதார)மாகவும ஆக்கப்பட்டார்.) ஏற்றதும் வழிகாட்டியதும அச் சிக்கலைத் தீர்க்காதற்குக் கரணியம். (சமயம் சார்ந்த) ஒரு குமுகாயச் சிக்கலுக்கு முழுமையான சமயத் தீர்வு கண்டதுதான் தவறு. இந்தத் தவற்றை அப்பொழுதே தந்தை பெரியார் அவருக்குச் சுட்டிக்காட்டியும் அதை அவர் உணரத் தவறி விட்டார். அவ்வொடுக்கப்பட்ட சாதியினர் புதிய—புத்த மதத்தினர் (Neo Buddists) என்ற பெயர் மாற்றம் (ஆதிதிராவிடர், அரிசன் என்பது போல) பெற்றிருக்கின்றனரேயன்றி விடிவு பெறவில்லை. இன்று அவர்கள் 'தலித்பந்தர்'களாகப் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

எனவே' நசுக்கிக் கொண்டும் நசிந்து கொண்டுமிருக்கும் இன்றைய பொருளியலமைப்பு ஒரு சமவுடைமைப் புரட்சியின் மூலம் ஒழிக்கப்படும் என்பது யார் விரும்பினும் வெறுப்பினும், நம்பினும் நம்பாவிடினும், ஒடுக்கினும் நடந்தே தீரும் என்பது இயற்கையின் கட்டளை; உண்மை நிலை. அப் பொருளியல் விடுதலைக்கான முன் முயற்சிகள், தேசிய இன விடுதலைக்கான போராட்டத்தின் ஒரு பகுதியாக அமையும் **அதே பொழுதில்**, சாதியமைப்பையும் சமய மத மூட நம்பிக்கைகளையும் வேரோடு பொசுக்கும்படியான பண்பாட்டுப் புரட்சியின் முதல் முயற்சியாக, கருத்துப் பரவலாக, சாதியமைப்பின் இழிவு, கொடுமைகள், மாந்தன் பெருமை போன்றவற்றை மக்களுக்கு, அவர்கள் ஏற்றுக்கொள்ளும்படியாகத் தொடர்ந்து அறிவூட்ட வேண்டும். நாட்டு இனவுரிமை, சமவுரிமை, சாதியொழிப்பு என்ற குறிக்கோள்களுக்கான முயற்சிகள் தொடர்ந்து இணைந்தே செய்யப்பட வேண்டியது மிகமிக இன்றியமையாததும் தவிர்க்க முடியாததுமாகும் என்பதை நாம் உணர்ந்து, உண்மையாக உழைப்பதன் மூலமே நாளை மலரவிருக்கும் **சாதிகளற்ற சமவுடைமைத் தமிழ்க் குடியரசைப்** பெற்றெடுக்க முடியும் என்பதை உறுதியாக மனத்தில் கொள்ள வேண்டும்!

'தென்மொழி' சென்னை-5

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்:	15 உருபா	35 உருபா	35 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	8 ,,	18 ,,	18 ,,
தனியிதழ்:	1.25 ,,	3 ,,	3 ,,

ஓரிதழுக்கு உருபா 2.50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

www.thamizham.net - Free E book No 7505

மக்களவை

246: பாவாணர் அகர முதலித் திட்டத்தின் நலிவுகள் !

பெருமதிப்பிற்கும் பேரன்பிற்கும் உரிய பாவலரேறு அவர்கட்கு வணக்கம். நான் கடந்த பதினைந்து நாட்களுக்கு முன் 'மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர்' அவர்களை நேர் கண்டு அறிந்துணர்ந்த செய்திகள் இவை: பாவாணர் அவர்கள் மேற்கொண்டு திசை திருப்பப்பட்டு, விரும்பத்தகாத நிகழ்ச்சி நடைபெறுவதைத் தடுக்கும் பொருட்டு இம் மடலைத் தாங்கள் விரைந்து தென்மொழியில் வெளியிடக் கேட்டுக் கொள்கின்றேன்.

பொதுவாகத் தென்மொழியில் தமிழின ஆக்கங்கருதிய நடுநிலைக் கண்ணோட்டத்தையே எதிர்பார்க்கின்றேன். எடுத்துக்காட்டாகத் தென்மொழி இயவ வெளியீடு ஆன 'ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்' என்ற நூலில் பக்கம் 32, 33-இல் 'பர். மு. வ' அவர்களின் 'தமிழ் இலக்கிய வரலாறு' என்ற நூலைப் பற்றிக் கீழ் வருமாறு எழுதியிருக்கின்றீர்கள்.

'... அவர் (மு. வ) சாயலில் ஆரியத்தை முட்டுக் கொடுத்துத் தாங்கி வலிக்காமல் குட்டியிருக்கின்றார். இவர்தம் கைகள் வலிக்கும் என்று கருதினாரோ, அல்லது அவர்களின் மண்டை வலிக்கும் என்று கருதினாரோ தெரியவில்லை' என்றும்,

'... வரலாறு என்பதை எப்படி எழுதுதல் வேண்டும் என்பதைப் பாவாணரின் ... நூல்களைப் பார்த்தேனும் மு. வ உணர்ந்து கொள்ளுதல், அவர்க்கும் நல்லது; அவர் எதிர்காலத்திற்கும் நல்லது ... இத்தகைய வரலாற்று நூல்கள் 'சாகித்திய அகாடமி' வழியாக வருவதற்கும், வீடுகளும், தெருக்களும், மலைத் தோட்டங்களுமாகவே வாங்கித் தள்ளுவதற்கும் ஒருவேளை பயன்படலாம். அல்லது மு. வ.வின் வையாபுரித் தனத்தை எதிர்காலத் தமிழ் மக்கள் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்காகவும் பயன்படலாம். ஆனால் இத் தொடை நடுங்கித்தனமெல்லாம், தமிழுக்கும், தமிழினத்திற்கும், இன்னும் எவ்வளவோ நடைபோட வேண்டிய தமிழ்க் குமுகாய அடிமை நீக்கத்திற்கும் துளியும் பயன்படாது' என்றும்,

'... இவருக்கு (மு. வ.விற்கு) 1959-இலிருந்தே தொடர்ந்து பல ஆண்டுகள் தென்மொழி இலவயமாக அனுப்பப் பெற்றிருந்தும் அதன் செம்மாப்பான இலக்கிய வெளியீடுகளையும், மொழித் தொண்டையும், இனப் போராட்ட ...த்தாண்மையும், இவர் தெளிவாக

www.thamizham.net - Free E book No 7505

அறிந்திருந்தும், அவற்றைப் பற்றி (தம் இலக்கிய வரலாற்றில்) ஒரு சொல்தானும் இவரின் பரந்த(!) உள்ளம் இசைந்து எழுதிவிடவில்லை' என்றும்,

'... மு. வ. தேய்ந்து தெ. பொ. மீ.யாகி அப்புறமும் தேய்ந்து வையாபுரியாக மாறி வருகிறாரோ தெரியவில்லை.' என்றெல்லாம் பா. மு. வ. அவர்களைப் பற்றி வெளிப்படுத்தப்பட வேண்டிய உண்மைகளை இருட்டடிப்புச் செய்தமைக்காக மிகக் கடுமையான முறையிலே திறனாய்வு செய்துள்ளீர்கள்.

ஆனால், தொடக்கக் காலத்தில் பலவகையான பொருளுதவிகளைத் திரட்டித் தந்ததும், அரசு எடுத்துக் கொள்வதற்கு முன்பு 'செ. சொ. பி. அகரமுதலி'த் திட்டத்தைப் பாவாணரைக் கொண்டு செய்வதற்கு அமைத்து அறிவித்ததும், இன்னும் தமிழின நலனைத் தவிர வேறு ஊதியங் கருதாததும், ஆன தென்மொழியைப் பற்றிப் பாவாணர் அவர்கள் தம்முடைய 'இலக்கிய வரலாற்று' நூலிலே ஒரு சொல்தானும் வெளியிடாமல் உள்ளாரே! இதை எப்படி ஐயா பொறுத்துக் கொண்டிருப்பது?

இப்படி அவரின் பிழைகளையும் தவறுகளையும் சுட்டிக்காட்டி நல்லாற்றுப் படுத்தும் எண்ணத்துடனும், சொ. சொ. பி. அகரமுதலியின் முதன் மடலம் மூன்றாண்டுகட்கு முன்பே எழுதி முடிக்கப் பட்டிருந்த செய்தியை அடுத்து மேற்கொண்டு அதன் வளர்ச்சிநிலை எவ்வாறு உள்ளதென்பதைத் தெரிந்து கொள்வதற்கும் நான் கடந்த பதினைந்து நாட்களுக்கு முன்னர் பாவாணர் அவர்களைக் கண்டு மிகவும் திடுக்கிட்டு அடைந்தேன்.

அவரின் பீடு பொருந்திய செந்தமிழ்த் தொண்டும், பகைவரையஞ்சாத் செந்தமிழ் நெஞ்சும், தமிழைப் பழித்தவரைத் தாக்கித் தகர்க்கின்ற நேர்மைத் திறனும், இன்று மாற்றங் கண்டும், மாற்றப் பட்டும் வருவதை எண்ணி உளங்கவன்றேன்.

'திருக்குறள் தமிழ் மரபுரை' எழுதிய அவ்வறிஞரை இன்று கிறித்தவம் பிடித்தாட்டுகின்றது. 'ஆரியத்தின் பிடியினின்று அருந் தமிழை மீட்பதே வாழ்க்கைக் குறிக்கோள்' என்று அறிவித்த அவர் ஆரியத்தை அலுவலகத்திலேயே அமர்த்தி மகிழ்கிறார். சலுகை போனால் போகட்டும், அலுவல் போனால் போகட்டும் தலைமுறை ஒரு கோடி கண்ட தமிழ் விடுதலை யாகட்டும் என்று வாழ்ந்த அவர், இன்று (தாம் கட்டிக்கொண்டிருக்கும் வீட்டின்) அடுக்குகள் முடியவில்லையே என்று அவலங் கொள்கின்றார். சுருக்கமாகத், திருடத் தெரியாதவன் தலையாரி வீட்டில் ஒளிந்த கதையாக இருக்கின்றது. தென்மொழியாரின் நேரடிக் கண்காணிப்பில் இருந்து அவர் தம்மை விலக்கிக் கொண்டவுடன், அவர்க்கு எங்கிருந்தெல்லாமோ உறவு

www.thamizham.net - Free E book No 7505

வருகிறது. அதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் அது அவரை ஆட்டி வைப்பதாக அறிகின்றேன்.

இன்று அவரைச் சொந்தங் கொண்டாடும் தமிழ் அன்பர்கள் எனப்படுவோர் பாவாணரின் மெலிவைக் கொண்டு, தங்களின் மெலிமையை (Weakness) வலிமையாக்கிக் காட்டுகின்றனர். அவர்கள் மாபெரும் புலி(த்தோல்) மறவர்கள் என்பதை மறைத்துப் பாவாணரையும் அப்படிப்பட்ட மறவர்களின் தலைவராக்கப் பார்க்கின்றனர். தென்மொழித் துணையில்லை என்ற ஒரே கரணியத்திற்காக அக் காக்கைக் கூட்டம் அவரைத் திசைமாற்றி அழைத்துச் செல்கிறது.

இனி வெளிப்படையாகத் தமிழ் நோக்கம் ஒன்றை மட்டுமே கொண்டு செ. சொ. பி. அகரமுதலி பற்றிச் சில செய்திகள் :

'பாவாணரின் அகரமுதலித் திட்டம் பிற அல்லது பிற மொழி அகரமுதலித் திட்டங்களைப் போல் ஒரு குழு முயற்சியாக இல்லாது தாமே, ஓரிரு படியெடுப்பாளர் துணையுடன், ஐந்து ஆண்டுகட்குள் முடிந்துவிடக் கூடியதாக இருக்குமென்று,' கடந்த ஏழு அல்லது எட்டு ஆண்டுகட்கு முன் பாவாணர் அறிவித்திருந்தார். ஆனால் செ. சொ. பி. அகரமுதலிப் பணியை அரசு ஏற்றுக்கொள்வதாக அறிவித்த பின், கடந்த ஏழு ஆண்டுகளில் கடந்த மூன்று ஆண்டுகட்கு முன்பிருந்து தொகுத்த முதல் மடலத்தைத் தவிர (அதுவும் இன்று ஐயமே) வேறு ஒரு சிறு விளைவும் இல்லை.

இவ்வளவிற்கும் தமிழக அரசு, இவர் எதிர்பார்த்ததற்கு அதிகமாகவே சம்பளத்தை உயர்த்தியும், இவர் அறிவித்ததற்கு மாறாக, இவர் வேண்டுகோளின்படி உதவியாளர் அறுவரை அமர்த்தியும் உதவி புரிந்துள்ளது. இந்நிலையில் அகரமுதலிப் பணி மட்டும் சிறிதும் நடைபெறவில்லை. துணைக்கு அமர்த்தப்பட்டவர்கள் தங்கள் சொந்தப் பணிகளை நிறைவேற்றிக் கொண்டிருப்பதாகக் கேள்வி.

இந்நிலையில் பாவாணரோ இன்னும் துணைக்கு ஆளமர்த்தம் கேட்கிறார். எவ்வளவு முரண்பாடு! மக்களின் வரிப் பணத்தை வீணாக்குவதாகாதா இது. பாவாணர் அவர்கட்குப் பெரும்பழியும், குற்றமும் வந்து சேர்ந்துவிடும் என எச்சரித்துத் திருத்துவதற்காகவே இம் மடல்.

கீழ் வருவனவற்றை நான் கேள்விப்பட்ட அளவில் எவ்வகையான உள்நோக்கமுமின்றி, தமிழ் நோக்கம் ஒன்றை மட்டுமே கொண்டு, பாவாணர் அவர்கள் இனி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்காக வெளியிடுகிறேன். இப்போதெல்லாம் பாவாணர், அவர் நெருங்கிய குடும்பத்தாரின் அறிவுரைப்படியே

www.thamizham.net - Free E book No 7505

நடந்து வருவதாகத் தெரிகிறது. அகரமுதலிப் பணியை அவர் குறித்த காலத்தில் முடித்து விட்டால் அவரின் பெருஞ் சம்பள வருமானம் நின்றுவிடும் என்பதால், அப் பணியை மிகமிக மெதுவாகச் செய்யச் சொல்லி அறிவுறுத்தியதாலும், இன்னுஞ் சொன்னால் மிரட்டியதாலுமே, பாவாணர் கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியை நிறுத்தி வைத்து, அக்காலத்தில் , வேறுவகையான. எவ்வகைச் சிறந்த ஆக்கம் தராத, பெருமைக்குப் பழி சேர்க்கக்கூடிய நூல்களை எழுதி அச்சேற்றி வந்துள்ளார்.

அன்று உலகத் தமிழ்க் கழகம் கண்டு, ஊரார்க்கெல்லாம் 'உண்மை, எளிமை, தந்நலமின்மை, ஈகம், தொண்டு (Sincerity, simplicity, Selflessness, Sacrifice, Service) என்ற உயரிய குறிக்கோட் பண்புகளை உரைத்த பாவாணர், இன்று உண்மைகளை மறைத்துத் தந்நல நோக்கத்துடன், தக்க வாய்ப்புக் கிடைத்தால் தம்மையே விற்றுவிடுமளவிற்குச் சென்று கொண்டுள்ளார்.

செ. சொ பி. அகரமுதலி வெளிவந்தால், தற்போது அவர் பெறுவதைக் காட்டிலும் நிறையப் பணம் அவர்க்கும். அவர் மக்களுக்கும் கிட்டும். அரசும், மக்களும், அறிஞரும் போற்றிப் பெருஞ் சிறப்புச் செய்வர். உலகெங்கணும் அவரின் உண்மைப் புகழ் பரவும். எனவே இது போன்ற இனியொரு மடலோ அல்லது ஆய்வுரையோ வெளிவராது பாவாணர் காத்துக் கொள்வாராக.

"குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து.

தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை.

அன்பன்,

தி. பி. உயகக துலை கள — நா. இளமாறன்.

அரசினர் கவனத்திற்கு ஒரு பிற்குறிப்பு :

ஒரு திட்டத்தைத் (Project) தொடங்கி விடுவது மட்டும் பெரிதன்று. அத் திட்டம் தடையின்றி நிறைவேறத் தக்கன செய்தல் வேண்டும். கீழ்க் காணுவனவற்றை உடனடியாகச் செய்தல். திட்டம் குறித்த காலத்தைக் காட்டிலும் விரைந்து நிறைவேற உதவும்.

1. செ. சொ. பி. அகரமுதலி இயக்குநர், மற்றும் பணியாளர் அனைவருக்கும் வேலை நேரம் வகுக்கப்பட்டுக் கண்டிப்பாக அவ் வேலை நேரத்தில் பணி சிறப்பாக நடைபெறுகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டும். பாவாணர் அவர்கள் முன்பே மிகுதியான நேரம் வேலை செய்ய இயலும் என்று அறிவித்தார். அதற்காக

www.thamizham.net - Free E book No 7505

அவரின் முதுமை கருதி அவர்க்கு வளிக்கட்டுப்பாட்டு அறை **(Air Conditioned Room)** அமைத்துத் தருதல் வேண்டும்.

2. பாவாணர் அவர்கட்குத் தொலைபேசித் தொடர்பு அமைத்துக்கொடுத்து அரசு நேரடித் தொடர்பு கொள்ளுதல் நல்லது.

3. அன்றாடம் எழுதப்படும் அல்லது தொகுக்கப்படும் செய்திகளை, அன்றன்றை மாலையிலேயே 'அன்றாட வளர்ச்சி அறிக்கை' **(Daily Progress Report)** மூலம் பெற்றுப் பணியைக் கண்காணித்து ஊக்கி வருதல்.

4. ஒவ்வொரு மாதமும் வளர்ச்சி நிலைகள் தமிழரசுச் செய்தியிதழ் வழியாக விளம்பரப்படுத்தல் வேண்டும்.

5. முடிவாக இதுவரை தொகுக்கப் பெற்றனவற்றை முதல் மடலமாக உலகத் தமிழ் மாநாட்டில் அச்சாக்கி வெளியிடல்.

தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் இவற்றை அரசு செய்து வரவில்லையெனில் பெரும் இழப்பும், தக்கன செய்யாத குற்றமும் அரசுக்கும் சேரும்.

"செய்தக்க அல்ல செயக் கெடும் —செய்தக்க
செய்யாமை யானும் கெடும்" —குறள்

247 : தமிழக விடுதலைப் போராட்ட முயற்சி பயனளிக்காது !

பெருமதிப்பிற்குரிய, தமிழர் தலைவர், பாவலரேறு ஐயா, வணக்கம். என்னைப் போன்ற பலர் தங்களிடம் கூற விழையும் கருத்துகளைச், சென்னை அன்பர், 'விடுதலை விரும்பி' அவர்கள் (தென்மொழி சுவடி 17, ஓலை 3) வெளியிட்டுள்ளார். அவர் கூறியுள்ள கருத்துகளுடன் மேலும் சிலவற்றைத் தங்கள் முன் வைக்கத் துணிகிறேன்.

தமிழகத்தில், இப்போது இருக்கும் மக்கள் தொகையில், குறிப்பிடத்தக்க விழுக்காட்டினர், மற்ற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். தமிழ், தமிழ்நாடு என்பதெல்லாம் அவர்கள் மனத்தோடு என்றும் இயைந்து விட முடியாத சொற்களாகும். இக் கூட்டத்தில் பிராமணர்களும் அடங்குவர். இவர்களெல்லோரும் சிறுபான்மையினர் என்றாலும், குறிப்பிடத்தக்க விழுக்காட்டில் தமிழகமெங்கணும் பரவியுள்ளனர். இன்றையத் தமிழகத்தில், குமுகாயம், பொருளியல், அரசியல் நிலைகளில் இவர்கள் பெரும் வல்லாண்மையுடன் விளங்குகிறார்கள். தமிழ் வளர்த்த மதுரையில்

www.thamizham.net - Free E book No 7505

இன்று ஒரு சௌராட்டிரர்தாம் 'மேயர்.' தனித்தமிழ் நாடு இயக்கத்தில் இவர்களுடைய பங்கு என்ன? இவர்களுடைய, மற்றும் இவர்களுடைய அடிவருடிகளாக இருக்கின்ற தமிழர்களுடைய வல்லாண்மையின் பிடிப்பிலேதான் தமிழக அரசு இயங்கி வருகிறது. விடுதலை வீரர்களாகக் களம் செல்ல விரும்பி முன்வரும் ஒரு சில பத்துப் பேர்கள், அவ்வப்போது நிலப்பறி இயக்கத்தினர் (நக்சலைட்) வேட்டையாடப்பட்டு அழிக்கப்பட்டு வருவது போல், வேட்டையாடப்படுவர் என்பது நாம் சிந்திக்க வேண்டிய ஒன்று. அந்த வேட்டைக்குக் காவு கொடுக்கப்படுவோரில், பாவலரேறுவும் சேர்ந்து விட்டால், தமிழர் தலைவர் பிறிதொருவரைத் தேடி நாங்கள் எங்குச் செல்வோம்?

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள தமிழரிடையேயும் இன்று, தனித் தமிழ்நாடு வேண்டுவோர் என்று, எத்தனை விழுக்காட்டை எதிர்பார்க்கலாம்? எனக்குத் தெரிந்த அளவில், 0.001 விழுக்காடு தானும் எதிர்பார்த்தல் இயலாது. தனித்தமிழ் உணர்ச்சியே குறிப்பிடத்தக்க அளவு, தமிழகத்தில் இல்லை என்ற நிலையில், தனித் தமிழ்நாட்டுணர்ச்சிக்கு நாம் எங்குச் செல்வது? உரியகாலத்தைத் தவற விட்டு விட்டோம். மற்ற மற்ற நாட்டு விடுதலைப் போராட்டங்களோடு நாம் விரும்பும் விடுதலைப் போராட்டத்தை ஒப்பிட்டுப் பார்த்தல் பொருந்தாது. அங்கெல்லாம் போராட வேண்டிய நிலையிலிருந்தவர்கள் ஒரே மொழியினர். ஒரே உணர்வினர். இங்கு எல்லாமே கலப்பு. இன்றைய நிலையில், நம் தமிழர்க்கு விடுதலை உணர்வைப் போதிய அளவு ஊட்டுவதென்பது எந்த நிலையிலும் இயலும் செயலாகத் தோன்றவில்லை.

இன்றையத் தமிழகத்தில் பொருளியல் குமுகாய, அரசியல் நிலைகளில் வல்லாண்மையுடைய தமிழர்களும், மற்றவர்களும், இந்தியாவின் ஏனைய மாநிலங்களிலும் உடைமைகள், உறவுமுறைத் தொடர்புகள் கொண்டுள்ளனர். அதிக எண்ணிக்கையில் நம் தமிழர்கள் மற்ற மாநிலங்களில் வாழ்ந்து வருகிறார்கள். தனித் தமிழ் நாடு போராட்டத்தைத் தொடங்கினால், நாம் காணவல்ல நற்பயன் ஒன்றுமிராது என்பது ஒருபுறமிருக்க, மற்ற மாநிலங்களிலுள்ள தமிழர்கள், தேவையற்ற முறையில் அளவற்ற தொல்லைகளுக்கும் துயரங்களுக்கும் உள்ளாவர் என்பது தவிர்க்க முடியாததாக நேரும். சமய நோக்கில் பார்த்தாலும், கிறித்தவ, முகம்மதிய மக்கள் தனித் தமிழ்நாடு குறித்து நினைத்துக் கூடப் பார்க்கும் நிலையில் இல்லாதவர்கள். ஏனினும், இன்றையத் தமிழக முன்னேற்றத்தில் அவர்கள் பங்கினைக் குறைத்து மதிப்பிடும் அளவுக்கு நாம் நன்றிகெட்டுப் போய்விடவில்லை. மேலும், பாசன நீர், மின் ஆற்றல் போன்றவற்... மாநிலங்களையே எதிர்பார்த்து நிற்க

www.thamizham.net - Free E book No 7505

வேண்டிய நிலையில் இருக்கிறோம். அவர்களுடன் நமக்கிருக்க வேண்டிய உள்ளார்ந்த கூட்டுறவு நிலை, தனித் தமிழ்நாடு இயக்கத்தினால் தாக்குறலாம்.

இத்தகு நிலைகளைத் தெள்ளத் தெளிவாக ஆராய்ந்து பார்க்கும் போது, தனித் தமிழ்நாட்டு விடுதலை இயக்கம், தற்போதுள்ள தமிழகத்தில் செய்தக்க செயல் அன்று என்ற முடிவுக்குத்தான் நாம் வர வேண்டியுள்ளது. ஆகவே தென்மொழி இயக்கத்தின் மூன்றாவது கொள்கையாகிய தமிழ்நாடு விடுதலைப் போராட்டம் ஏற்புடையதன்று என்பது, என்னுடைய கருத்து. அருள் கூர்ந்து இக் கொள்கையை மறு ஆய்வு செய்யுங்கள். இத்தகு விடுதலைப் போராட்டம் தொடங்கும் முயற்சியைக் காலவரையறையின்றித் தள்ளிப் போடுதல் நலம் என்றும், இதற்கிடையில், நாம் செய்ய வேண்டுவது 'விடுதலை விரும்பி' தெரிவித்துள்ளபடி, தமிழ உணர்வுகளை,—'நாம் தமிழர்' என்ற உணர்வை—நம்மவரிடையே ஏற்படுத்தும் முயற்சிகளைச் செல்லும் வாயெல்லாம் சென்று மேற்கொள்ளலாம் என்றும், இந்த முயற்சியைத் தென்மொழி இயக்கத்தின் மூன்றாவது கொள்கையாகக் கொள்ளலாம் என்றும், என்னுடைய உணர்வு மற்றும் அறிவு வழிப்பட்ட கருத்துகளாகத் தங்களின் நுண்மாண் நுழைபுலத்துக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை."

வாழ்க தென்மொழி இயக்கம்!
வளர்க தமிழ உணர்வுகள்!

தங்கள் அன்புத் தொண்டன்,
—**க. சி. அகமுடைநம்பி**, பொறி. இ; மதுரை-20

248: ஆதி, காரணம், காரியம்

பேரன்புடையீர் வணக்கம்! தென்மொழி சுவடி 17-ஓலை 1 இதழில் 'ஆதி' இஃது ஆதித் தமிழ்ச் சொல்லே' என்ற கட்டுரையைப் பார்த்தேன். இதைப் பற்றித் தக்கார் ஒருவரிடம் உசாவினேன். ஆதி என்ற சொல்லிற்குத் தமிழிலோ அல்லது சமற்கிருதத்திலோ வேர் இல்லை. இது வேறு இந்தியத் திரவிடச் சொல்லாக இருக்கலாம். ஐயத்திற்குரிய சொல்லைத் தமிழ்ச் சொல்தான் என்று உறுதிப் படுத்துவது முறையன்று; வேறு மொழியில் வேர்ச் சொல் இருந்து விட்டால் நம் ஆய்வு பொய்மையாகி விடும்' என்றார்.

'ஆதி' இஃது ஆதி தமிழ்ச் சொல்லே என்ற கட்டுரையை ஆக்கியோர் பன்மொழி அறிவுத் திறன் வாய்க்கப் பெற்றவரா? தமிழ் இலக்கண இலக்கியங்களை முற்றும் கற்று ஆய்ந்து, தெளிவடைந்தவரா? அறிவின் முதிர்ச்சியாலும், அறிவின் திறத்தாலும்

www.thamizham.net - Free E book No 7505

நடுவு நிலைமை பிறழாமல் ஆய்வு நடத்தக்கூடிய தகுதி படைத்தவரா? என்பதை யெல்லாம் நாங்கள் அறியோம். ஆனால் முரன்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் மொழிக்கு ஆக்கம் விளைவிக்காது என்பதை மட்டும் அறிவோம். இப்போது இவை போன்ற கட்டுரைகளைத் தவிர்த்தல் 'தென்மொழிக்கும்' நம் மொழிக்கும் ஆக்கம் தரும் செயலாக அமையும். மேலும் தென்மொழியில் சாதி, காரணம் போன்ற பிற சொற்கள் வலிந்து கையாளப்பட்டு வருவது 'தென்மொழிக்கு வலிமையைத் தரவல்லதா? பிறர் சுட்டிக்காட்ட இடம் கொடுக்கும் அல்லவா? எண்ணிப் பார்க்கும்படி வேண்டுகின்றேன். இங்ஙனம் தென்மொழி படிக்கும் தமிழன்,

—**ஆ. கருப்பையா. நெய்வேலி.**

(ஆசிரியர் குறிப்பு: ஆராய்ச்சியில் ஒருவர் ஒரு புதுக் கருத்தை வெளியிடுகிறார் என்றால், அதைப் பிறர் மறுத்துக் கட்டுரை வழி வேறு முடிவுகளை உறுதிப்படுத்துவதே தக்கது. அதை விடுத்துக் கட்டுரையே வெளியிட வேண்டாம் என்பது சால்பன்று. அந்நிலை அறிவு வளர்ச்சியையே குழியிலிட்டுப் புதைப்பதற்கொப் பாகும்.

இனி, **சாதி** என்பது வடசொல் என்பதையும் முற்றும் ஏற்பதற்கில்லை. அது தொல்காப்பியம், பெரும்பாணாற்றுப்படை (229) ஆகிய பழைய கழகக் கால நூல்களிலும், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய கடைக் கழகக் கால நூல்களிலும் கையாளப் பெற்றுள்ளது. அது தமிழ் என்பதற்கும் சில வேர்நிலைகள் உண்டு. அது 'வேறு இந்தியத் திரவிடச் சொல்' என்பது விளங்கவில்லை. வேறு திரவிடம் என்பதாக ஒன்றுண்டா? மேலும் திரவிடம் என்பதே தமிழிலிருந்து திரிந்த மொழியைத்தானே குறிக்கும். அக்கால் ஆதி தமிழ்ச் சொல்லாகத்தானே இருத்தல் வேண்டும். இனி, அது வடசொல் என்பது உறுதியானால், அது பற்றிக் குறிக்க வேறு எந்தச் சொல்லைப் பயன்படுத்துவது? இனம், குலம் என்ற சொற்கள் சாதிக்கு நேர் பொருள் தரும் சொற்களாகா. எனவேதான் தென்மொழி அந்த உணர்வை அதே சொல்லால் குறித்து வருகிறது. அடுத்து **காரணம், கரணியம்** என்னும் இரு சொற்களுக்குமே வேர் **கரு** என்பது பாவாணர் கருத்தானால் அணம் என்னும் பெயர்ச்சொல் பின்னொட்டை ஏற்ற காரணம் என்னும் சொல் ஏன் தமிழாகாது என்பது நமக்குத் தெரியவில்லை. கரு+அண்+இயம் என்று பிரிபடும் கரணியம் என்னும் சொல்லை விட கரு+அணம் என்று பிரிபடும் காரணம் என்னுஞ் சொல் தமிழாகாது என்பது முற்றும் பொருந்துமாறில்லை. மேலும், கரணியம் என்னுஞ் சொல் கண்டு பிடிக்கப் பெறும் வரை, அதைக் குறிக்கத் தமிழில் சொல்லே இல்லையென்பதும் தமிழின் முழுமையைக் குறைவு படுத்துவதாகாதா? எனவே இரண்டு சொற்களுமே தென்மொழியில் ஆளப் பெறுகின்றன.

—பொறுப்பாசிரியர்.)

www.thamizham.net - Free E book No 7505

அவர்கள் ஆய்ந்து சொன்னவையே தவறு என்று (தவறாகப்) பரப்பப்படுமானால் இனி யாரை நம்பித் தனித் தமிழ் பேசுவது? தனித் தமிழைப் பரப்புவது?

—தமிழ நேயன், தலைவர், தனித்தமிழ் கழகம், புதுவை.

0:817: அன்புள்ள ஐயா, அவர்களுக்கு வணக்கம்! குல ஒழிப்புப் பற்றிய ஆசிரிய உரை மிக அருமை. ஆனால், இதைச் செயல்படுத்த முடியாது எந்த அரசாலும். காரணியம், இப்பொழு துள்ள ஆட்சி முறை நடைமுறையிலுள்ள அரசியலமைப்பைத் தழுவி யது. அந்த அரசியலமைப்பும் வேதத்தை உள்ளடக்கியது. எனவே, இவ்வகை அரசியலமைப்பை வைத்துக்கொண்டு ம. கோ. இரா. ஆனாலும், கலைஞரே ஆனாலும் அல்லது வேறு கொம்பன் யாரானா லும் இந்த ஓட்டைகளை அடைக்க வியலாது. அப்படி முயன்றும் மண் அணையின் ஓட்டைகளை உள்ளங்கை வைத்து வெளிப்புறமாய் நின்றடைப்பதற்கு ஒப்பாகும்.

முதலில் தென்மொழி யன்பர்களாயிருப்பவர்கள் உண்மையில் தம்மைத் தென்மொழி யன்பர்கள் என்று மெய்ப்பிக்கும் வகையில், தம் குழந்தைகளின் பள்ளிச் சான்றிதழ்களில் குலம் மதம், நாடு என்னும் இடங்களில் 'தமிழர்' என்று குறிப்பிடுதல் வேண்டும். குழந்தைகட்குத் திருமணம் என்று நினைக்குங்கால், தென்மொழி வழி அன்பர்களின் வேறு குழந்தைகளுடன் இணைத்துத் திருமணம் நடத்தி வைத்தல் வேண்டும் சலுகைகளை முன்னிட்டு உள்ளொன் றும் புறமொன்றுமாயிருக்கக் கூடாது. இவ்வாறு நாமே (ஆசிரி யர் நீங்கலாக, அவர் விலக்கன்று; அவர் செயல் வடிவம்.) கூட்டாகத் திகழ்ந்தால் ஓரளவு குறையலாம்; பிறர் நம்மைப் பார்த்துப் பின்பற்றலாம். இதை நம்மவர்கள் செய்வார்களா? இந்தத் தமிழ்க் குலத்தின் துயரும் தீருமா? இறைவன்தான் வந்து இதற்கெல்லாம் விடிவுண்டாக்க வேண்டுமா? வெளிச்சமே இல்லாத அடவிக்குள்ளிருக்கும் புதை சேற்றில் சிக்கித் தவித்திடுபவரை யொத்த இத் தமிழ மாந்தருக்கு என்று நன்மை ஏற்படுமோ?

— கி. பாலு, மின்பாறை.

0:818: ஐயா, அவர்கட்கு வணக்கம். தாங்கள் கோவை வந்திருந்த பொழுது எங்களுடன் உரையாடியிருந்த செய்திகள் நெஞ்சை விட்டு அகலாமல் உள்ளன. அவற்றை அடிக்கடி நினைந்து கொள்கிறோம்.

- o காற்றில்லாத போது அசையாமல் இருப்பதன்று உறுதி; அது கடும் புயலுக்கிடையிலும் அசையாமல் நிற்பதேயாகும்.
- o இன்று முள் குத்துகிறதென்றால், திடும் எனக் குத்துகிறதா? இல்லை. அதற்கும் விதை விழுந்து, நீர் பெற்று, முளைத்து, தழைத்து, வளர்ந்து, உரம் பெற்றுத்தான் குத்தியிருக்க முடி யும். எனவே இவ்வளவு நாளாய்ப் பாராதிருந்து, குத்திய பொழுது கூச்சலிட்டு என்ன செய்வது?
- o கருத்து வளத்தைக் கொண்டு ஒருவனை எடையிட வியலாது. தன் கருத்தின் செயலாக்கத்திற்கு அவன் ஆற்றியுள்ள செயல் களைக் கொண்டே அவனை எடையிட வியலும்.

என, இப்படிப் பல்வேறு உண்மைகளை உரையாடலின் இடை யிடையே எடுத்துரைத்தீர்கள். தங்களின் ஆழமான பட்டறிவி லிருந்தே இம் மெய்ம்மொழிகள் உருப்பெற்று வந்திருக்க வியலும்.

www.thamizham.net - Free E book No 7505

'குமுதம் அழியும்; சாவி அழியும்; விகடன் அழியும்; குங்குமம் அழியும்; ஆனால் இது மட்டும் என்றும் அழியாது' எனத் தென்மொழியைக் காட்டி அமைச்சர் ஒருவர் கூறியதாகத் தாங்கள் தெரிவித்தீர்கள். மிகவும் வியப்புற்றோம். இந்த உண்மையை அறிந்திருந்தும், இது மேலோங்குவதற்குத் தங்கள் அளவில் இவர்கள் ஏதேனும் செய்தாலென்ன? ஓர் உதவியும் செய்ய முன்வரா நிலையில் எதைக் கூறினாலும் அது பசப்புரை என்றுதானே அமைய வியலும்.

இனி, இன்று தமிழ்நாட்டரசு கடைப்பிடித்து வரும் எழுத்துச் சீர்மை ஓர் அமைவியல் ஒழுங்கால், தமிழ் நலத்திற்கு எவ்வகையிலும் ஊறு தராததாய் இருத்தலால், தமிழின் மெய்நலத்திற்கென உழைக்கும் தென்மொழி என்றேனும் ஒருநாள் இதனை உளமகிழ்வுடன் ஏற்கும் என எங்கோ ஒரு மூலையில் நம்பிக்கை கொண்டிருந்தோம். தென்மொழியே இதனை முன்னின்று செயலாக்கும் என்னும் நம்பிக்கை அடிமனத்தில் எங்கோ ஓர் ஓரத்தில் உறைந்து கொண்டிருந்தது. அது பொய்யாகவில்லை என்பதைத் தாங்கள் அறிவித்த கருத்துகள் மெய்ப்பித்தன. ஐகார உயிர்மெய் அனைத்திற்கும் 'ை' என்னும் இரட்டைக் கொம்பையே பயன்படுத்தலாம் என்றும், ஆகார உயிர்மெய் அனைத்திற்கும் 'ா' என்னும் காலையே பயன்படுத்தலாம் என்றும், சீரான ஒழுங்கியலுக்கு இவையே ஏற்றவை என்றும், 'இவற்றையே அரசு நடவடிக்கைகளிற் கட்டாயம் பயன்படுத்த வேண்டும்' என அரசு இட்டுள்ள கட்டளை சரியானதே என்றும், தென்மொழியும் இவற்றைப் பயன்படுத்தத் தொடங்கும் நாள் வரும் என்றும் தாங்கள் தெரிவித்தது எங்கட்குப் பேருவகையை நல்கியது. முதலில் இவற்றைத் தென்மொழி மறுத்து நிற்குமாறு' எழுந்த தேவைப் பற்றியும் விளக்கமுற எடுத்துரைத்தீர்கள்.

தென்மொழி நலத்தில் தமிழர் நலம் பொருந்தியிருத்தல் போல், தமிழ்நல நடவடிக்கைகட்குத் தென்மொழி, முன் ஏக வேண்டியதும் கட்டாயத் தேவையாகும். எழுத்துச் சீர்மையையும் சிறிது சிறிதாய்க் கைக்கொண்டு நடைமுறைப் படுத்துங்கள். தென்மொழியைப் பரப்புதற்கு எங்கள் முயற்சிகள் என்றும் செயன்மை பெறும்.

— **தங்களன்புள்ள கோவைத் தோழர்கள்.** கோவை.

0:819: . பேரன்புடை ஐயா, தில்லியினின்று மாத மிருமுறை வெளிவரும் 'காரவன்' (**Caravan**) என்னும் இதழில் (அக். 1) வெளிவந்த 'சூத்திரர்' இயக்கத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் மெல்லச் சாதலும்' (**Rise, fall and slow death of the Shudra Movement**) என்னுங் கட்டுரையைக் கவனித்திருப்பீர்கள் எனக் கருதுகிறேன். கலைஞர் இயக்கத்தின் தலைமையேற்க வேண்டும் என்னுங் கட்டுரையாசிரியா கருத்து தங்கள் கருத்தோடு பெரிதும் ஒத்திருந்தது. இராசசேகர் செட்டி (**Rajashehar Shetty**) என்பவரால் (அவர் வெளி மாநிலத்தார் போலும்) நடுநிலையோடு சிறப்பாய் எழுதப்பட்டிருந்தது அக் கட்டுரை. 'கலைஞர் கோளரியாய் முழங்க விழைகிறாரா, அல்லது புழுவைப் போலச் சாக விழைகிறாரா?— அவர் முடிவு செய்ய நேரம் வந்து விட்டது' என்கிறார் கட்டுரையாசிரியர். கலைஞர் கவனிப்பாரா?— **தமிழ்ச்சிறுவன் கா. சுந்தரன்.** மதுரை

தென்மொழி மின் அச்சகம், சென்னை (தமிழகம்) 600005

www.thamizham.net - Free E book No 7505